நல்லூர் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம்

## கூட்டுறவாளர் தின விழா

# சிறப்பு மலர்

# 1980




" கூட்டுறவே நாட்டுயர்வு "

ஆடியபாத வீதி,
திருநெல்வேலி,
யாழ்ப்பாணம்.

தொ. பேசி 7646

13-8-80.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்றே விஜயம் செய்யுங்கள்
இறக்குமதி செய்யப்பட்ட பல இன

பைசிக்கிள்கள், அவற்றின்
உதிரிப்பாகங்கள்

மற்றும்

பலசரக்குப் பொருட்கள்,
அன்பளிப்புச் சாய்ப்புச் சாமான்கள்,
மலிவான விலையில் பெற்றுக் கொள்ள



இ. ச. பேரம்பலம் அன் சன்ஸ்

50, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 324

ஏக விநியோகஸ்தர்கள்:
எசியா, ஈஸ்டன் பைசிக்கிள்,
இலங்கையில் உற்பத்தியாகும்
லோட்டஸ் ரயர் வகைகள்.

கூட்டுறவு
நாட்டுயர்வு

V. Nithyanandan 23/2/82



**நல்லூர் ப. நோ. கூ. சங்கம்**

(பதிவு இல. ஜே / 1564)

ஆடியபாத வீதி, திருநெல்வேலி,
யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 58 ஆவது சர்வதேச கூட்டுறவாளர் தின விழாவினை நினைவு கூர்ந்து

அகில உலகக்
கூட்டுறவாளர்களுக்கும்
அனைத்து ஈழத் திருநாட்டின்
கூட்டுறவாளர்களுக்கும்
இம்மலர் சமர்ப்பணம்

எல்லோர்க்கும் எல்லாமே என்றே ஞாலம்
இலங்கிடவே கூட்டுறவு ஏற்ற பாதை
இல்லாமை இல்லாத வாழ்வு வேண்டின்
ஏற்றிடுவோம் கூட்டுறவு வெற்றிப்பாதை

தலைவர் — பணிப்பாளர் — பணியாளர்

**நல்லூர் ப. நோ. கூ. சங்கம்**
*(பதிவு இல. ஜே / 1564)*
ஆடியபாத வீதி, திருநெல்வேலி,
யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நல்லூர் பல நோக்குக் கூட்டுறவுச் சங்க கீதம்

(தெம்மாங்கு)

1. கூட்டுறவு வாழ்க என்று கொடியும் ஏற்றுவோம் - எங்கள்
நாட்டுயர்வே கூட்டுறவு என்று போற்றுவோம்
வீட்டுயர்வு காட்டும் எங்கள் கூட்டுறவைப் போற்றி நிதம்
பாட்டினிலே பாடி விழாக் கொண்டாடுவோம் - எங்கள்
நாட்டினிலே கூட்டுறவுப் பண்பாடுவோம்.

2. கொக்குவில் கோண்டாவில் திருநெல்வேலி கல்வியங் - காடு
மிக்க புகழ் கொண்ட எங்கள் கூட்டுறவே
மக்கள் அபிலாஷைகளை நித்தம் பூர்த்தி செய்ய - அது
தக்க நல்லூர் பல நோக்குக் கூட்டுறவுச்—சங்கம்
திக்கெல்லாம் புகழ்மணக்க ஊதுவோம் சங்கம்

3. ஊருக்கு உழைக்குமெங்கள் உழவர்களின் இன்னல் - நீங்க
யாருக்கும் கடனுதவி செய்திடுவோம்
சீருக்கும் சிறப்புக்கும் சிறந்ததொரு பல - நோக்கு
பாருக்குள் கூட்டுறவுச் சங்கமிதே – அது
பல்லாண்டு பல்லாண்டு வாழியவே.

4. ஏழை மக்கள் வாழ வழி எழிலான சேமிப்பினை
ஆழமாகக் காட்ட கிராமீய வங்கி
வேளையிலே நகை அடைவு வேண்டும் பணம் தந்—துதவி
வாழையடி வாழையெனத் தந்திடுமே - சங்கம்
வாழி வாழி வாழியெனப் பாடுவோமே.

5. நல்ல நல்ல தொழில்வளர நாடு வளம்பெற்றிடவே
வல்ல திட்டம் செயல்படுத்தி வென்றிடுவோம்
அல்லல் அகற்றிடுவோம் ஆனந்தம் தந்திடுவோம்
வெல்ல வழி காட்டுமே கூட்டுறவு - சங்கம்
வாழி வாழி வாழி யெனப் போற்றிடுவோம்

ஆக்கம்
''இயலிசைவாரிதி''
யாழ்ப்பாணம் என். வீரமணிஐயர்



இலக்கிய கலாநிதி
பண்டிதமணி
சி. கணபதிப்பிள்ளை, டி.லிற்.
அவர்கள் வழங்கிய

## ஆசியுரை

திருநெல்வேலி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் பழமையானது, விஸ்தாரமானது. தற்போது நல்லூர் ப. நோ. கூ. சங்கமென்ற நாமம் பூண்டு பல கிளைச் சங்கங்களைக் கொண்டது.

ஒன்று பட்டாலுண்டு வாழ்வு என்ற குறிக்கோளைப் பேணி, நல்ல காரியங்களில் வழிகாட்டிகளாய் விளங்குபவர்களை உபசரித்து, ஊக்கம் அளிக்கும் பண்பாடு படைத்தது.

ஒரு முறை,

விவசாய மன்னர் திரு. கே. என். நல்லதம்பி அவர்களை உபசரித்தது என் மனதில் இன்றும் பசுமையாயிருக்கிறது.

இத்துணைச் சிறப்பு வாய்ந்த கூட்டுறவுச் சங்கம், பெருவிழா எடுப்பது பொருத்தமானது.

'பொதுமக்கள் நலன்களே கூட்டுறவுச் சங்கத்தின் நலன்கள்' என்பதை நடைமுறையிற் காட்டுவதாய்ப் பெருவிழா மிளிர்வதாக என்று, திருவருளைப் பிரார்த்தித்து ஆசியுரை அளிப்போமாக.

கலாசாலை வீதி.
திருநெல்வேலி,
யாழ்ப்பாணம்.

ஒவ்வொரு மனிதனும் மனிதத் தன்மைக்கு
சேவை செய்து கடவுளை தரிசிக்க முடியும்
ஏனென்றால் கடவுள் மேல் உலகிலும் இல்லை
பாதாள உலகிலும் இல்லை,
அவர் எல்லோர் மனதிலும் பரவியுள்ளார்.
—மகாத்மா காந்தி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எக்கலக்ஸ் EC 25

## எக்கலகஸ் ஈசி 25 (கவினுல்பாஸ்)

- மிகவும் சக்திவாய்ந்த ஒரு தொடு நஞ்சு
- எக்கலக்ஸ் பூச்சிகளை உடனடியாகத் தாக்கி அளிக்கும் ஒரு சக்தி வாய்ந்த மருந்து
- எக்கலக்ஸ் சக்திவாய்ந்த ஒரு உட்கொள்ளுக நஞ்சாக வேலை செய்வதால் இலை மற்றும் காய்களை சேதப்படுத்தும புழுக்களை அழிக்கிறது
- எக்கலறஸ் இலைத்துளைகள் மற்றும் பூச்சிகளின் மேலுறைகள் புகுந்து செல்லும வியபபளிக்கும் சக்தியுள்ளதால் சாதாரண மருந்துக்களால் கட்டுப்படுத்த முடியாத பூச்சிகளையும் சிறப்பாகக் கட்டுபபடுத்துகிறது
- எக்கலக்ஸ் பயிர்களுக்கு நீண்டகால பாதுகாப்பு அளிக்கிறது
- எக்கலக்ஸ் ஒரு சிக்கனமான பூச்சி மருந்தாக விளங்குகின்றது
- எக்கலக்ஸ் செடிகளை எவ்விதத்திலும் பாதிப்பதில்லை
- மேலும் எக்கலக்ஸ் செம்பான் சிவப்பு சிவந்தி பூச்சிகளை கட்டுப் படுத்தும் ஒரு சிறந்த மருந்தாகவும் பயன்படுகிறது
- எக்கலக்ஸ் நெல், மிளகாய், வெங்காயம், கத்தரி, புகையிலை, உருளைக்கிழங்கு மற்றும் ஏனைய காய்கறிகள், பழவகைகளில் பாவிக்கலாம்

விநியோகத்தர்கள் .

**A. பவர் அன் கம்பனி லிமிடெட்**

**கொழும்பு.**




# வாழ்த்துரை

**உயர்திரு.**

**மு. சிவசிதம்பரம் அவர்கள்**

தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவரும்,
நல்லூர் தேசியப் பேரவை உறுப்பினரும்

"கூட்டுறவு நாட்டு உயர்வு" என்னும் முதுமொழிக்கு இலக்கணமாக நல்லூர் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம் பல்வேறு சேவைகளின் அடிப்படையில் செயற்பட்டு வருவதையிட்டு மகிழ்ச்சி அடைகிறேன்.

கொக்குவில் கிராமாட்சி மன்ற எல்லைப் பரப்பினையும், நல்லூர் கிராமாட்சி மன்ற எல்லைப் பரபபினையும், உள்ளடக்கியுள்ள பகுதியில் வாழும் மக்களின் தேவைகளை அறிந்து. அவர்களுக்குப் பல வழிகளிலும் சேவைகள் ஆற்றி வருவது யாவரும் அறிந்த உண்மை. முதுபெரும் கூட்டுறவாளர்களினால் உருவாககப்பட்ட இச்சங்கம் கூட்டுறவாளர் தினத்தை நினைவு கூர்ந்து இன்று பல்வேறு நிலைகளில் போட்டிகளை நடாத்தி பரிசில்கள் வழங்கி வெகு விமரிசையாக கூட்டுறவாளர் தினவிழாவை நடாத்துவதன் மூலம் மக்களுக்கும், நிர்வாகத்துக்கும் நெருங்கிய பிணைப்பை ஏற்படுத்தும் வகையில் "சிறப்புமலர்" ஒன்று வெளியிடப்படுவதைப் பாராட்டும் அதே வேளையில் விழா சிறப்புற வாழ்த்துகிறேன்.

ஆடியபாத வீதி,
திருநெல்வேலி யாழ்ப்பாணம்.

* * * *

"காலத்தின் தேவைக் கேற்பக் கூட்டுறவுத் துறையின் சட்ட திட்டங்கள் மாற்றப்பட வேண்டும். அதிற் தான் கூட்டுறவுத் துறையின் உண்மையான வெற்றி அடங்கியுள்ளது"

— அறிஞர் அண்ணா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உள்ளே ...


கூட்டுறவுக் கீதம்
ஆசியுரை
வாழ்த்துரை
ஆசிச் செய்திகள்
கனவு நனவாகிறது—ஆசிரியர்
திரு. சி. க. அன்டுறு - சாற்றுகிறுர்
திரு. ந. அருணுசலம் - உரைக்கிறுர்
திரு. பொ. சோமாஸ்கந்தன் - பேசுகிறுர்

திரு. எம். எஸ். தர்மலிங்கம் —
நல்லூர் ப. நோ. கூ. சங்க வளர்ச்சிப் பாதையில் ஒன்பது ஆண்டுகள்

பேராசிரியர் க. கைலாசபதி —
கூட்டுறவு இயக்கம் — சில பிரச்சனைகள்

திரு இ. சுப்பிரமணியம் —
போட்டிப் பொருளாதாரத்தில் — கூட்டுறவின் ஆயக்கம்

திரு. க. சண்முகலிங்கம் —
கூட்டுறவுக் கொள்கைகளும், நடைமுறைகளும்

திருமதி மனோன்மணி சன்முகதாஸ் —
கூட்டுறவும், மகளிரும்

பேராசிரியர் கா. இந்திரபாலா —
உலகம் சுற்றும் பிள்ளையார் மிகப் பழைய கற்சிலை இலங்கையிலா ?

திரு. எஸ். சிவயோகநாதன் —
இலங்கையில் கூட்டுறவு இயக்கம் — ஒரு கண்ணோட்டம்

செல்வி வோ. கந்தையா
கூட்டுறவு சிந்தனைகள்

பொதுச்சபை உறுப்பினர்கள் — விளம்பரங்கள்

படங்கள் :
பணிப்பாளர் சபை — கடல் கடந்த விருந்தினர் — முன்னாள் தலைவர்கள் — பணியாளர்கள் —




## ஆசிச் செய்தி

**திரு. ச. ஞானப்பிரகாசம்**
கூட்டுறவு அபிவிருத்தி உதவி
ஆணையாளர் யாழ்ப்பாணம்

கூட்டுறவுச் சங்கம் சமூகத்தின் பலவித வளர்ச்சிக்கு உதவும் நிலையம். யாழ். குடாநாட்டில் இருபத்திரண்டு பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் இயங்கி வருகின்றன. இவற்றில் நல்லூர் ப. நோ. கூ. சங்கம் ஒன்பது ஆண்டுகளாக திறம்பட சேவையாற்றிய சங்கம். எனவே இச் சங்கம் அகில உலக கூட்டுறவுத் தினத்தை கொண்டாடும் இத்தினத்தில் நல்வாழ்த்துக்கூறி மிகவும் களிப்புறுகிறேன். அன்று தொட்டு இற்றைவரை கூட்டுறவு இலாகாவின் புத்திமதிகளைப் பெற்று நமது மக்களுக்குச் சிறந்த தொண்டாற்றி இலாகாவினதும் பொது மக்களினதும் நன் மதிப்பைப் பெற்ற சங்கங்களில் ஒன்றாகும்.

இச்சங்கத்தினை நன்நிலைக்கு கொண்டுவர பணிபுரிந்த சகல நெறியாளர்குழு உறுப்பினர்களுக்கும் கிளைக்குழு உறுப்பினர்களுக்கும் பணியாளர்களுக்கும் எமது நன்றி உரித்துடையதாகும்.

இச்சங்கம் இன்னும் பல துறைகளில் அபிவிருத்தி அடைந்து எமது மக்களின் வளமும் சமூக வாழ்வும் உயர்ந்து செழித்தோங்க நான் எனது நல்லாசிகளையும், வாழ்த்துக்களையும் கூறுகின்றேன்.

கூட்டுறவு அலுவலகம்,
யாழ்ப்பாணம்.

★ + ★

ஐக்கியம் என்பது ஒன்ருக இயங்குவது அதற்கு ஆதியும் இல்லை. அந்தமும் இல்லை. அது என்றும் உளது. எங்கும் உளது. அதில் அறிவு வியாபகம் அதன் போக்கு இன்ப சுகம்.
— அமரர் வி. வீரசிங்கம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ஆசிச்செய்தி

**திரு. தி. சண்முகராசா,**
கூ. உ. ஆணையாளர் (எண்பார்வை)
யாழ்ப்பாணம்.

கூட்டுறவு தினவிழாவையொட்டி வெளியிடப்படும் இவ்விசேட மலருக்கு ஒரு செய்தியை அனுப்புவதில் மிகவும் மகிழ்ச்சியடைகிறேன நுங்கள் சங்கம் ஆற்றிய, ஆற்றிவருகின்ற சிறந்த சேவைகளுக்கு என்னுடைய பாராட்டுக்கள்.

குறிப்பாக உள்ளூர் விவசாயிகளைப் பொறுத்த வரையில் அவர்களுக்குரிய கடன் வசதிகள், உரம், கிருமிநாசினிகள் போன்றவற்றை எவ்வித சிரமமும் இன்றி உரிய நேரத்தில் தமது பகுதியிலேயே பெற்றுக்கொள்ள வசதிகள அளித்திருப்பதையிட்டு உங்களைப் பாராட்டாமல் இருக்க முடியா .

நுகர்ச்சியாளர்களது தேவைகளைக் கருதுமிடத்து அவை மிகவும் சிறப்பாக சங்கக் கிளைகள் மூலம் நிவர்த்தி செய்யப்பட்டு வருவதோடு மட்டுமல்லாமல் தங்களுடைய மாதிரிக் கடையானது இதற்கொரு சான்றாக விளங்குகின்ற .

இவ்வயலைத்திற்கும காரணமாயிருந்த இயக்குநர் சபையினதும் பணியாளர்களுனதும் விசுவாசம்மிக்க சேவை பாராட்டுதற்குரியது.

கூட்டுறவு இயக்கமானது தனியார்துறை வர்த்தகத்துடன் ஒரு பெரும் போட்டியை எதிர் நோக்கியுள்ள இந்தக் கால கட்டத்திலே அங்கத்தவர்களினது நேர்மையான விசுவாசம் சங்கத்தின் நிலையைப் பேணிக் காப்பதற்குத் தேவைப்படுகின்றது, இது மட்டுமன்றி இன்றைய பொருளாதார சூழ்நிலையில் நுகர்ச்சியாளர்களினதும் உற்பத்தியாளர்களினதும் ஒருங்கிணைந்த பங்களிப்பு சங்கத்தின் வளர்ச்சிக்கு அத்தியாவசியமானதாகும்.

உங்களுடைய சங்கம் மென்மேலும் சிறப்புற்றியங்க என்னுடைய மனப்பூர்வமான வாழ்த்துக்கள் உரித்தாகுக.

# ஆசிச் செய்தி

**சி. எம். பீ. போகொல்லாகம**
தலைவர், ஸ்ரீ லங்கா தேசிய கூட்டுறவு சபை, கொழும்பு

## 58வது சர்வதேச கூட்டுறவு தினம்

ஐம்பத்தி எட்டாவது சர்வதேச கூட்டுறவு தினத்தை அறுபத்தி ஆறு நாடுகளைச் சேர்ந்த முப்பத்திநாலுகோடி கூட்டுறவாளர்கள் 5ம் திகதி ஆடி மாதம் கொண்டாடுகின்றார்கள். இக்கொண்டாட்டத்தை நல்லூர் ப நோ. கூ. சங்க கூட்டுறவாளர்களும் இம்முறை மிக விமரிசையாகக் கொண்டாடுவது மிகவும் பொருத்தமானது. கூட்டுறவு இயக்கம் ஜனநாயக முறைப்படி தனியார்துறை, பொதுத்துறை ஆகிய துறைகளுடன் சரிநிகராக நின்று போட்டி போட்டு அங்கத்தவரின் சமூக, பொருளாதார, கலாச்சாரத்தை வளர்க்கவேண்டுமென்று அரசாங்கம் பிரகடனப்படுத்தியுள்ளது. பூரணமான கூட்டுறவு இயக்கத்தை கூட்டுறவுக் கொள்கையின் படி கட்டி எழுப்ப இந்த 58வது கூட்டுறவு தினத்தில் கூட்டுறவாளர்களாகிய நாம் உறுதி பூணுவோமாக. இந்நடவடிக்கையின் பயனாக பாடசாலை மாணவர்களுக்கு கூட்டுறவுக் கொள்கைகள், நடைமுறைகள், சமுதாயத்தில் அவற்றின் பங்கு என்பனவற்றை இத்தினத்தில் எடுத்துரைப்போம். அங்கத்தவர்களுக்கு சங்கத்தில் அவர்களின் பங்கு, தொடர்புகள் என்பனவற்றை எடுத்து விளக்குவோம். பணியாளர்களுக்கு, நிர்வாகத்தின் திறமை, மற்றைய நிறுவனங்களைவிடக் கூட்டுறவு நிறுவனம் எப்படி மாறுபட்டுள்ளது என்ற கருத்துக்களை எடுத்துக் கூறுவோம். நெறியாளர்குழு உறுப்பினர்களுக்கு சங்கத்தைத் திறம்பட நிர்வகிப்பதும், அங்கத்தவர்களின் தேவைகளைப் பூர்த்தி செய்வது போன்ற விடயங்களை விளக்குவோம்.

மேற்றுகூறிய நடவடிக்கையின் பலனாக இவ்வாண்டு கிராம, மாவட்ட, தேசிய மட்டத்திலான தன்னிச்சையான கூட்டுறவு இயக்கத்தை கட்டி வளர்த்து, நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கு உதவுமாறு கேட்டுக் கொண்டு நல்லூர் ப. நோ. கூ. சங்க கூட்டுறவுத் தினவிழா சிறப்பு மலருக்கு ஆசியுரை வழங்குவதில் பெருமகிழ்ச்சியடைகிறேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எழில் மிகு

**கல்யாணப் பட்டுப் பிடவைகள்**

கண்கவர்

**ஜவுளி ரகங்கள்**

உயர்தர றெடிமேட் சேட்ஸ், பெல்ஸ், ரி. சேட்ஸ், மினிஸ்கேட்ஸ்
சிங்கப்பூர் சன்குட்ஸ் கவுன்கள் அனைத்திற்கும்

# ராஜ்கோபால்ஸ்

47, பெரியகடை, யாழ்ப்பாணம்.

*With Best Compliments from :*

# SANKAR BROTHERS

Importers, Exporters & Indenting Agents

**216, 4th Cross Street,**
**COLOMBO – 11**

T'Phone : 25171 T'grams : Roseflower

---

போன் : 284

## வேண்டுவார்க்கு வேண்டியது எல்லாம் உண்டு

- ★ திருமண அன்பளிப்புகள்
- ★ பிறந்த நாள் பரிசுகள்
- ★ அன்றாட பாவனைப் பொருட்கள்
- ★ உணவுப் பொருட்கள்
- ★ இல்லத்தரசிகளின் இல்லத் தேவைகள்
- ★ அழகுசாதனப பொருட்கள்
- ★ பாட்டா பாதணிகள்
- ★ காஸ் குக்கர்கள்
- ★ மாவரைக்கும் இயந்திரங்கள்
- ★ குளிர்சாதனப் பெட்டிகள்
- ★ மின் விசிறிகள்
- ★ மின் உபகரணங்கள்
- ★ சைக்கிள்கள்
- ★ கைக்கடிகாரங்கள்

ஏக விநியோகஸ்தர்கள்

பி. சீ. சீ.
J. L. மொறிசன்ஸ் அன் ஜோன்ஸ் லிமிட்.
யூனியன் காபைட் லிமிட்.
பாட்டா (BATA) நிறுவனம்

அனைத்தும்
தரமான ரகத்தில், மலிவான விலையில்
ஒரே இடத்தில் பெற்றுக்கொள்ள நாடுங்கள்.

# சி. சின்னத்துரை அன் பிறதர்

39, காங்கேசன்துறை வீதி,
யாழ்ப்பாணம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எங்கும் இன்பம்

முன்னேற்றப் பாதையிலே நாடு — இன்று
முன்னேறிச் செல்வதனைப் பாடு
தன்னுழைப்பால் உயர்ந்துநிற்கும் நாடு — என்றே
தென்னுதமிழ் மொழியினிலே பாடு! (முன்னேற்)

நாணயத்தால் வெற்றியினைச் சூடும் — சுய
நலமதனைக் குற்றமெனச் சாடும்
மானசீக அன்பினிலே ஆடும் — நல்
மனமெல்லாம் கூட்டுறவை நாடும். (முன்னேற்)

மங்காமல் ஒளிவீசும் தங்கம் — இந்த
மண்மீதில் ஒளிகூட்டிப் பொங்கும்
எங்கெங்கும் இன்பங்கள் தங்கும் — வழி
ஏற்றிவிடும் கூட்டுறவுச் சங்கம். (முன்னேற்)

ஒற்றுமையாய் வாழவழி சொல்லும் — நல்ல
உயர்வானக் கொள்கை வழிசெலும்
பொற்புமிகு பயன்பெறவே செய்யும் — புதிய
பாதையிலே இன்பத்தினைப் பெய்யும்! (முன்னேற்)

— தாழம்பேடு கவிப்பித்தன்

நன்றி — 'கூட்டுறவு' 4—80


- 40க்கு மேற்பட்ட கிளைகள்
- கூட்டுறவு வைத்தியசாலை
- கூட்டுறவு அச்சகம்
- கூட்டுறவு மின்தறி நிலையம்
- கூட்டுறவு இருப்புக்கடை
- கூட்டுறவு எரிபொருள் நிலையம்
- கூட்டுறவுக் கிராமிய வங்கி
- கூட்டுறவு கைத்தறி நிலையம்
- கூட்டுறவு மொத்த விற்பனை நிலையங்கள்

ஆகியனமூலம்

பொது மக்களுக்கு எம்மாலியன்ற சேவை செய்கிறோம்!
எங்கள் சேவை தொடர, தங்கள் ஒத்துழைப்பை நாடுகிறோம்.

நெறியாளர்கள் பணியாளர்கள்

**யாழ். பல. நோ. கூ. சங்கம்**

43, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.


## ஆசிச் செய்தி

**திரு. இ. நடராசா அவர்கள்**
வடபிராந்திய முகாமையாளர், மக்கள் வங்கி

ஏழை எளியவர்களுக்கு வாழ்வழிக்க உதயமான கூட்டுறவு இயக்கம் இன்று கிராமிய பொருளாதார அபிவிருத்திக்கு உறுதுணையாக இருந்து வருகிறது. இந்நிலையில் நல்லூர் பலநோக்குக கூட்டுறவுச் சங்கத்தைப் பொறுத்தளவில் பண்பட்ட கூட்டுறவாளர்களின் திறமையான நிர்வாகத்தின் கீழ் அதன் சேவை பல்கிப் பெருகி பொதுமக்களின் ஆதரவைப்பெற்று இன்று கோலாகலமாகக் கொண்டாடும் கூட்டுறவு தினவிழா சிறப்புற வாழ்த்தி அதன் மலருக்கு ஆசிச்செய்தி வழங்குவதில் பெருமை அடைகறேன்.

வட பிராந்திய அலுவலகம்,
மக்கள் வங்கி,
பிரதான வீதி,
யாழ்ப்பாணம்.

---

**திரு. ஆ. மு. ஆலாலசுந்தரம் அவர்கள்**
(தலைவர் ஸ்ரீலங்கா தேசிய கூட்டுறவுச் சபை, யாழ்ப்பாணம்)
வழங்கிய

## ஆசிச் செய்தி

"கூட்டுறவு இயக்கம் மக்கள் இயக்கம்" இதனை மக்கள் இன்று வரை பூரணமாக உணரவில்லை. மக்களால், மக்களின் நன்மைக்காக நடாத்தப்படும் கூட்டுறவு இயக்கத்தை மக்கள் பூரணமாகப் பயன்படுத்த ஆரம்பித்தால் வெளியார் சக்திகளின் நெருக்கடிகள், சமூகத் தாக்கங்கள் மக்களைத் துன்புறுத்த முடியாது. கூட்டுறவு இயக்கத்தின் முழுமையான வெற்றிக்கு சேவை, நேர்மை, ஒழுங்கு ஆகிய மூன்றையும் தாரக மந்திரமாகக் கொண்டு பணி புரியும் நல்லூர் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத் தலைவர், இயக்குனர்கள், பணியாளர்கள் எடுக்கும் கூட்டுறவாளர் தின விழாவின் சிறப்பு மலருக்கு ஆசிச் செய்தி வழங்குவதில் இதயம் பூரிப்படைகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆசிச் செய்தி

**திரு. ஜே. எஸ். எஸ். ஆனந்தம்**
உணவுக் கட்டுப்பாட்டதிகாரி, யாழ்ப்பாணம்

மக்கள் தங்களுடைய தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கு ஒன்றுகூடி கூட்டுறவு இயக்கத்தை வளர்த்தார்கள்.

இன்று அரசாங்கம் மக்களுக்கு தான் செய்யும் சேவையினை இவ்வியக்கத்தின் மூலம் அளித்து வருவதுடன் மக்களே இவ் இயக்கத்தை நடாத்தும் வகையில் அவர்களிடம் ஒப்படைத்து உள்ளது.

இந்நிலையில் நல்லூர் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் அங்கத்தவர்களால் தெரிவு செய்யப்பட்ட ஏழு இயக்குனர்களுடனும், நான்கு நியமன இயக்குனர்களுடனும் நலல சேவையினை மக்களுக்கு ஆற்றி வருகின்றது.

கூட்டுறவாளர்களின் தொன்மையைப் பிரதிபலிக்கக்கூடிய வகையில் நல்லூர் ப. நோ. கூ. சங்கத்தால் எடுக்கப்படும் விழாவின் சிறப்பு மலருக்கு ஆசிச்செய்தி வழங்குவதில் பெருமகிழ்வு கொண்டு, விழா சிறப்புற வாழ்த்துகிறேன்.

---

# ஆசிச் செய்தி

**திரு. க. சபாபதிப்பிள்ளை**
(உதவி அரசாங்க அதிபர் நல்லூர்
(விஷேட ஆணையாளர் கொக்குவில் கிராமாட்சி மன்றம்)

**1971-ம்** ஆண்டு கூட்டுறவுச் சங்கங்கள் புனரமைப்பு செய்யப்பட்டபோது திருநெல்வேலி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கமாக உருவாக்கப்பட்டு பின் நல்லூர் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கமாக பெயர் மாற்றம் செய்யப்பட்டு இன்று தனது அளவிடற்கரிய சேவையின் பிரதிபலிப்பாக கூட்டுறவாளர் தினவிழாவை மக்கள் விழாவாகக் கொண்டாடுவது மட்டும் அல்லாமல், சிறப்புமலர் ஒன்றினையும் வெளியிடுவதை உளமார வாழ்த்தி அம்மலருக்கு ஆசிச் செய்தி வழங்குவதில் மகிழ்ச்சி அடைகிறேன்.

உதவி அரசாங்க அதிபர்,
நல்லூர்,
பலாலிவீதி, யாழ்ப்பாணம்.

# ஆசிச்செய்தி

**பேராசிரியர் சு. வித்தியானந்தன்**
துணைவேந்தர்
யாழ்ப்பாணப் பல்கலைக் கழகம்.

கூட்டுறவு எமக்கு எப்பொழுதுமே வேண்டியதொன்றாகும். கூட்டுறவுப் பணியிலே ஈடுபடுபவர்கள் நாட்டு மக்களுக்குத் தொண்டு செய்பவர்களாகவே கருதப்படுவர். இந்த வகையிலே திருநெல்வேலி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கமாயிருந்து நல்லூர் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கமாக மாறியுள்ள நிறுவனம் இப்பகுதி மக்களுக்குப் பெருந் தொண்டாற்றி வருகின்றது பல்கலைக் கழகம் அமைந்துள்ள இப்பகுதியினைச் சார்ந்த இந்நிறுவனம் பல்கலைக் கழகத்துடனும் பல தொடர்புகள் கொண்டுள்ளது.

இந்நிறுவனத்தைச் சார்ந்தவர்கள் இம்மாதம் கூட்டுறவாளர் தினத்தையொட்டி ஒரு விழாவெடுக்க இருக்கின்றனர் அவ்விழாவினை என்றுமே நினைவுகூரும் வண்ணம் ஒரு சிறப்பு மலரையும் வெளியிட எண்ணியுள்ளனர், அம்மலருக்கு இவ்வாசிச் செய்தியினை வழங்குவதிற் பெருமகிழ்ச்சியடைகிறேன்

விழா இனிதே நடைபெறவும் மலர் சிறந்து நறுமணம் வீசவும் என்னுடைய அன்பான வாழ்த்துக்கள்,

## உங்களுக்குத் தெரியுமா?

# யாழ் மாவட்டத்தின்

## இன்றைய கூட்டுறவு நிறுவனங்கள்

| | | |
|---|---|---|
| பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் | — | 22 |
| கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்கள் | — | 7 |
| கைத்தொழிற் கூட்டுறவுச் சங்கங்கள் | — | 33 |
| ஐக்கிய நாணய சங்கங்கள் | — | 361 |
| பாடசாலை அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்கள் | | 50 |
| ஆஸ்பத்திரி கூட்டுறவுச் சங்கங்கள் | - | 04 |
| கூட்டுறவு அச்சுக்கூடங்கள் | — | 02 |
| ஏனைய கூட்டுறவுச் சங்கங்கள் | — | 56 |
| மொத்தம் | | 576 |
| சமாசங்கள் | — | 03 |
| இன்றைய ப.நோ.கூ. சங்கங்களின் அங்கத்தவர்கள் | — | 151419 |
| அங்கத்தவர்களில் தெரிவு செய்யப்பட்ட இயக்குனர்கள் | — | 140 |
| நியமன இயக்குனர்கள் | — | 24 |
| பணியாளர்கள் | — | 2891 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கனவு நனவாகிறது ...

மனித குலம் எப்பொழுது தோன்றியதோ அப்பொழுதே கூட்டுறவும் தோன்றியது அறிவு வளர்ச்சியின் பயனாக கூட்டுணர்வு விருத்தி பெற்று பல்வேறு நிலைகளில் மக்கள் கூட்டுறவை வளர்த்து வருகிறார்கள்.

பரஸ்பர உதவிகளைப் பகிர்ந்துகொள்ளும் தன்மையில் கூட்டுறவு இயக்கத்தை வழிநடாத்தி வரும் நல்லூர் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம் மக்களுக்கு சில சேவைகளை துணிந்து செய்வதில் தனக்கென ஓர் தனியிடத்தினை கூட்டுறவாளர்கள் பொதுமக்கள் மத்தியில் ஏற்படுத்திக்கொண்டு செயற்பட்டு வருகிறது இத்தகைய ஒரு செயற்பாட்டின் அடிப்படையில் எவரது சிந்தனையிலும் மறையாத ஒரு மலரினை சர்வதேச கூட்டுறவாளர் தினத்தினை நினைவு கூர்ந்து தலைவர், பணிப்பாளர், பணியாளர் வெளியிடுவது ஒரு சாதனையாகும்

எமது சங்கத்திற்கென அதன் சேவைகளைப் பிரதிபலிக்குப் வண்ணப் சங்கீதம் ஆக்கித்தந்த யாழ்ப்பாணம் இயல் இசை வாரிதி என். வீரமணி ஐயரினதும்,

இம்மலருக்கு ஆசியுரை வழங்கிய இலக்கிய கலாநிதி பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை, வாழ்த்துரை வழங்கிய திரு. மு. சிவசிதம்பரம், ஆசிச் செய்திகள் வழங்கிய திருவாளர்கள் ச. ஞானப்பிரகாசம், தி. சண்முகராசா, இ. நடராசா, பேராசிரியர் க. வித்தியானந்தன், ஜே. எஸ். ரஸ். ஆனந்தம், க. சபாபதிப்பிள்ளை, ஆ. மு. ஆலாலசுந்தரம் ஆகியோரதும்,

கட்டுரைகள் எழுதி உதவிய திரு. எம். எஸ். தர்பலிங்கம், பேராசியர் க. கைலாசபதி, திரு இ. சுப்பிரமணியம். திரு. கே. சண்முகலிங்கம், திருமதி மனோன்மணி சண்முகதாஸ். பேராசிரியர் கா. இந்திரபாலா, திரு எஸ். சிவயோகநாதன், செல்வி லோ. கந்தையா ஆகியோரதும்,

மலரினை சிறப்புற வெளியிட உதவிகள் பல புரிந்த வர்த்தகப் பிரமுகர்கள், தொழில் அதிபர்கள் ஆகியோரதும்,

மற்றும் மலர் மலர்வதற்குப் பல்வேறு நிலைகளிலும் உதவிகள் புரிந்தோரதும் சிறப்புற அச்சிட்டுத் தந்த யாழ்ப்பாணம் பலநோக்குக் கூட்டுறவுச் சங்க நடாத்தும் கூட்டுறவு அச்சகத்தினரதும்

ஒன்றுபட்ட முயற்சியின் பயனாக நல்லூர் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் மற்றுமோர் கனவு நனவாகிறது.

நல்லூர் ப. நோ. கூ. சங்கம் — எல்லோருக்கும் நன்றி— ஆசிரியர்

> கூட்டுறவு ஒரு அமைப்பு மட்டுமன்று. மக்களின் இதயத்தில் எழுகின்ற உணர்வுமாகும் எனவே தொழில் துறையில் கடைப்பிடிக்கும் ஒரு மதந்தான் கூட்டுறவு; சுய நிறைவும், சேவையும் தான் அதன் வேதவாக்கு.
>
> — சேர். டார்வின்



சங்கத் தலைவர்

## திரு சி. க அன்ரூ

## சாற்றுகிறார்

இலங்கைக் கூட்டுறவு இயக்கம் வரலாற்றில் புதியதோர் சகாப்தத்தை 1971-ம் ஆண்டு உருவாக்கியது இதன் பெறுபேறாக திருநெல்வேலி ப. நோ. கூ. சங்கம் ஆரம்பிக்கப்பட்டு பின் 1975-ம்ஆண்டு நல்லூர் ப. நோ. கூ. சங்கமாக மாறியது.

ஒன்பது ஆண்டுகள் மக்களுக்கு அளப்பரிய பல சேவைகளை ஆற்றிவரும் இச்சங்கம் 18 லட்சம் ரூபாவை இலாபமாக ஈட்டி கூட்டுறவுக் கோட்பாடுகளுக்கும் சட்ட திட்டங்களுக்கும் அமைவாக கல்வி அபிவிருத்தி பொதுநல நிதி, கூட்டுறவு நிதி மற்றும் சட்டப்படி ஒதுக்குகள்—இரண்டு தடவைகளில் ஊழியர்களுக்கு சுமார் நாற்பத்தொன்றாயிரம் ரூபா அளவில் போனஸ் ஆக வழங்கப்பட்டுள்ளது. அத்துடன் 71-ம், 72-ம், 73-ம், 74-ம் ஆண்டுகளில் சுமார் ஐம்பதாயிரம் ரூபா அளவில் அங்கத்தவர்களுக்கு இலபமாகப் பகிரப்பட்டுள்ளது.

1980-ம் ஆண்டிற்கான பல்வேறு அபிவிருத்தித் திட்டங்களுள் பாண் போறணை அமைத்தல். மின்தறி ஆரம்பித்தல், விறகுகாலை நடாத்துதல் கல் உடைக்கும் தொழிற்சாலை அமைத்தல், மாட்டுப் பண்ணை, அரிசி ஆலை அமைத்தல், மோட்டார் உதிரிப்பாக மின் இணைப்புப் பொருத்திகள் விற்பனை நிலயம் அமைத்தல் ஆகிய திட்டங்களை நடைமுறைப்படுத்த நாம் வடவடிக்கை மேற்கொள்ளுகிறோம்

இதன் சேவை மேலும் மக்களுக்குப் பயன்படும் வகையில் திர்விக்க உங்கள் பரிபூரண ஒத்துழைப்பை நாடுகிறோம்.

-நன்றி-

"வியாபாரத்தின் பயனாக ஏற்பட்ட மேலதிகம், ஒரு வகை மேல் அறவீடு என்றே கருதப்படவேண்டும். அது எவர்களிடம் இருந்து மேலதிகமாக அறவிடப்பட்டதோ அவர்களுக்கு அம் மேலதிகம் உரியது. அவர்களுக்கே அம் மேலதிகம் திருப்பிச் செலுத்தப்படல் வேண்டும்."—கல்வேர்ட்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



சங்க உபதலைவர்

## திரு. ந. அருணாசலம்

அவர்கள், உரைக்கிறார்

நல்லூர் பல நோக்கு கூட்டுறவுச் சங்கம் ஆரம்பிக்கப்பட்டு ஒன்பது ஆண்டு காலம் திருப்திகரமான சேவையின் மூலம் மக்களின் ஆதரவையும் திணைக்களத்தின் பாராட்டுதல்களையும் பெற்றுள்ளன.

இன்று, தனது சேவையை மேலும் பல வழிகளில் தனது பகுதி மக்களுக்கு அளிப்பதற்காக முன்னேற்றப் பாதையை நோக்கி இன்றைய எரிபொருள் தட்டுப்பாடான சூழ்நிலையில் துணிகரமாக ஒரு சேவையினை எமது பகுதி மக்களுக்கு அளித்துள்ளது. அதாவது யாழ்மாவட்டத்தில் உள்ள எந்தவொரு பல நோக்குக் கூட்டுறவுச் சங்கமும் மக்களுக்கு அளிக்க முன்வராத நிலையில் நாம் துணிந்து அரசமரக் கூட்டுத்தாபனத்தின் முகவராகப் பதிவு செய்து விறகு விற்பனை நிலையம் ஒன்றை ஆரம்பித்து இலாபகரமாக நடாத்தி வருகிறோம்.

மேலும் பலதரப்பட்ட சேவைகளை மக்களுக்கு அளித்து போட்டி வியாபாரத்தில் தனியார் துறையினருக்கு ஈடு கொடுத்து செயல்பட இத்தினத்தில் நாம் அனைவரும் திடசங்கற்பம் பூண்டு செயற்பட வேண்டுகிறேன்.

---

கூட்டுறவுச் சங்கங்களை நடாத்த ஒருவருக்குத் தூய்மையான உள்ளம் வேண்டும். மேகங்கள் மழை மொழிவதற்காகக் கூடுகின்றன. ஆனால் காகங்களோ கிடைத்ததை உண்பதற்காகக் கூடுகின்றன. மேகங்களை ஒத்தவர்களாய் கூட்டுறவாளர்கள் ஒன்றுகூடி சமுதாயத்தை வளப்படுத்தப் பாடுபடவேண்டும். காகங்களை ஒத்தவர்களாய் செயற்படக்கூடாது.

— கலைஞர் மு. கருணாநிதி



பொது முகாமையாளர்

## திரு. பொ. சோமாஸ்கந்தன்

பேசுகிறார்

வடபகுதி வளம் கொழிக்கும் பகுதி என்று பலராலும் பேசப்படுகிறதென்றால் அது மறைமுகமாக அங்குள்ள பழம் பெரும் கூட்டுறவாளர்களின் அரிய சேவைகளையே சுட்டிக் காட்டுவதாக அமைகிறது இந்நிலையில்

நல்லைநகர்க் காவலன், நல்லூர் கந்தன் அருளைத் தினமும் யாசித்து வரும் நல்லூர் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் நான்கு கூட்டுறவுத் தலைவர்களின் பண்பட்ட வழி நடாத்தலின் பயனாக இன்று ஒன்பது லட்சத்துக்கும் அதிகமான பெறுமதியுடைய நிலையான சொத்தை தன்னுள் அடக்கி உள்ளது குறிப்பிடப்பட வேண்டியதொன்றாகும். தொடர்ந்தும

எமது சங்கம் அங்கத்தவர்களின் கையில் ஒப்படைக்கப்பட்டிருக்கும் இவ்வேளையில் திரு. சி, க. அன்டுறு அவர்கள் தலைமையில் பதினொரு இயக்குநர்களுடன் புதிய தென்புடன் செயற்பட்டு வருகின்றோம்.

இந்நிலையில் 1979—ம் ஆண்டுக்குரிய எண்பார்வைக் காலத்தில் சுமார் ஒரு லட்சத்து தொண்ணூற்றெட்டாயிர ரூபா அளவில் நிகர லாபமாகச சங்கம் பெற்றுள்ளது. இவ்வெண்பார்வைக் காலத்தில் புதிய நிர்வாகத்தின் இரண்டரை மாத காலமும் அடங்கும். தொடர்ந்தும் 19 0—ம் ஆண்டு எமது பல்வேறு நடவடிக்கைகள்மூலம் சங்கத்தை இலாபகரமாக நடாத்தி வருகிறோம். இந்நிலைக்கு,

எமக்கு வேண்டிய நேரங்களில் எல்லாம் ஆலோசனைகளும் உதவிகளும் செய்தவரும் கூட்டுறவுத் திணைக்கள யாழ்ப்பாண உதவி ஆணையாளர் திரு எஸ். ஞானப்பிரகாசம், பெரும்பாக கூட்டுறவு அபிவிருத்தி உத்தியோகத்தர் திரு. எம். எஸ். தர்மலிங்கம், மக்கள் வங்கி (ஸ்ரான்லி வீதி) முகாமையாளர் திரு ஆர். அருளானந்தம் கூட்டுறவு உதவிஆணையாளர் (எண்பார்வை) திரு தி. சண்முகராசா ஆகியோரை இங்கு குறிப்பிடமால் இருக்க முடியாது.

சங்கத்தின் அபிவிருத்தியை மேன்மேலும் கருத்தில் கொண்டு உங்கள் பரிபூரண ஒத்துழைப்பை நாடுகின்றோம்.

நன்றி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கார், லொறி, மீன்பிடி வள்ளம், தண்ணீர் பம்,
டிராய்க்ரர் என்ஜின்களில் ஏற்படும்
சகல வேலைகளுக்கும்

வடமாகாணத்தில் உள்ள ஒரே ஸ்தாபனம்


**ராமகிருஷ்ணாஸ்**

தொடர்பு கொள்ளவேண்டிய முகவரி


ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.

தொலைபேசி: 7179


# முன்னாள் தலைவர்கள்



திரு. ந. குமாரசுவாமி
26-6-71 — 30-8-72



திரு. இ. பொ. குமாரசுவாமி
1-9-72 — 27-7-77



திரு. ஏ. எம்ஃ எம். குலநாயகம்
28-7-77 — 31-5-79



திரு. க. தர்மலிங்கம்
1-6-79 — 13-10-79

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பணிப்பாளர் சபை






கா. பாலசுப்பிரமணியம்
(பணிப்பாளர்)

இருப்பவர்கள் திருவாளர்கள் :-
(இடமிருந்து வலம்)

பொ. சோமாஸ்கந்தன் (பொதுமுகாமையாளர்) அ. செல்வத்துரை (பணிப்பாளர்) த. அருணாசலம் (உபதலைவர்) சி. க அன்டுறு (தலைவர்) எம். எஸ். தர்மலிங்கம் (பெரும்பாக கூட்டுறவு அபிவிருத்தி உத்.)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பணிப்பாளர் சபை





கா. பாலசுப்பிரமணியம்
(பணிப்பாளர்)

இருப்பவர்கள் திருவாளர்கள் :-
(இடமிருந்து வலம்)

பொ. சோமாஸ்கந்தன் (பொதுமுகாமையாளர்) அ. செல்லத்துரை (பணிப்பாளர்) த. அருணாசலம் (உபதலைவர்) சி. க அன்ரூ (தலைவர்) எம். எஸ். தர்மலிங்கம் (பெரும்பாக கூட்டுறவு அபிவிருத்தி உத்.)

நிற்பவர்கள் திருவாளர்கள் :-
(இடமிருந்து வலம்)

அ. பொ. இராசையா (பணிப்பாளர்) அ. கமலநாதன் (பணிப்பாளர்) மு. வாமதேவன் (செயலாளர்) சி. கந்தையா (பணிப்பாளர்) க. சதாசிவம் (பணிப்பாளர்) நா கணபதிப்பிள்ளை (பணிப்பாளர்) வ. சி. சோதிலிங்கம் (பணிப்பாளர்)

சோ. தவலிங்கம் (பணிப்பாளர்) படத்தில் இல்லை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கடல் கடந்த விருந்தினர்




அண்மையில் எமது சங்கத்திற்கு விஷயம் செய்த மலேஷிய கூட்டுறவாளர் திரு. சண். துரைசிங்கம் (இடமிருந்து இரண்டாவதாக இருப்பவர்) மற்றும் இடமிருந்து வலமாக இருப்பவர்கள்: முன்னாள் தேசிய கூட்டுறவுச்சபை உபதலைவர் திரு எஸ். எஸ். பத்திநாதர், சங்கத்தலைவர் திரு. சி. க. அண்டுறு, தேசிய கூட்டுறவுச்சபை யாழ். மாவட்டத் தலைவர், திரு. ஆ. மு. ஆலாலசுந்தரம் இடமிருந்து வலமாக நிற்பவர்கள் திரு: பொ. சோமஸ்கந்தன் (பொதுமுகாமையாளர்) திரு எம். எஸ். தர்மலிங்கம் (பெரும் பாக கூ. அ. உத்தியோகத்தர்) தேசிய கூட்டுறவுச்சபை யாழ். மாவட்ட செயலாளர் திரு. ம. பத்திநாதன், சங்க உப-தலைவர் திரு. ந. அருணாசலம், ஆகியோர்களுடன் பணியாளர்களும் காணப்படுகிறார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# பணியாளர்கள்



நல்லூர் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் இன்றைய உன்னதநிலைக்கு உழைத்த உள்ளங்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பணியாளர்கள்


அன்பளிப்பு

**விநாயகர் ஸ்ரோர்ஸ்**

166 ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.

போன்: 7787


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அன்பளிப்பு

# எஸ். ஏ. செல்லையா

14, 24, நாலம் குறுக்குத் தெரு,

கொழும்பு - 11

தொலைபேசி: 22128

---

நல்லூர் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கவிழா
சிறப்புற எமது வாழ்த்துக்கள்

# ராஜா ஹனி ஸ்ரோர்ஸ்

438, மத்திய வீதி,

திருகோணமலை

---

நல்லூர்
ப. நோ. கூ. சங்கத்தின்
கூட்டுறவாளர் தின விழா
சிறப்புற வாழ்த்துகிறோம்

நீங்கள் மில்க்வைற்
தயாரிப்புகளுக்குத் தரும்
ஆதரவின் பயன்.

- ※ வசதி, வாய்ப்பு, பயன் கருதி மரங்களை நடுதல்
- ※ வீட்டுத்தோட்டம் விருத்தி செய்தல்
- ※ பனை வளம் பெருக்கிப் பயன்பல பெறுதல்
- ※ பசளை தரும் செடிகள், மரங்களை உண்டாக்குதல்
- ※ ஊர்கள்தோறும் குளங்களை ஆளமாக்கி மழைநீரைத் தேக்குதல்
- ※ சனசமூக நிலையங்களில் வாசிக்க வழி செய்தல்
- ※ பக்தி நெறியில் பரமனைப் பணிந்து வாழப் பயிற்றுதல்
- ※ எல்லோரும் எவ்லோருக்கும் சேவை செய்தல்
- ※ வள்ளுவர் நெறியில் வையகம் வாழ வழி வகுத்தல்
- ※ எல்லோரும் யோகாசனம் பயில வைத்தல்

# மில்க்வைற் சவர்க்காரத் தொழிலகம்

த. பெ. இல. 77, யாழ்ப்பாணம்.

வியாபாரிகளுக்கு விசேட பரிசு :

72 சவர்க்காரஞ் சுற்றுவரும் பெரிய உறை 50 அல்லது
36 சவர்க்காரஞ் சுற்றிவரும் பெரிய உறை 100 அல்லது
50 சதம் கட்டி சுற்றிவரும் உறை 50 அனுப்பிப்

பெரிய துவாய் ஒன்று பெறுக

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நல்லூர் ப. நோ. கூ. சங்கத்தின்
கூட்டுறவாளர் தினவிழா சிறப்புற

# ஆர். கே. இன்டஸ்ரீஸின்

வாழ்த்துக்கள்

**ஆர். கே. இன்டஸ்ரீஸ்**
சைவப்பாடசாலை ஒழுங்கை,
கோண்டாவில் மேற்கு,
கோண்டாவில்.

நல்லூர் ப. நோ. கூ. சங்கம்

## வளர்ச்சிப் பாதையில்

# ஒன்பது ஆண்டுகள்



திரு. எம். எஸ் தர்மலிங்கம்
பெரும்பாக கூட்டுறவு அபிவிருத்தி உத்தியோகத்தர்

லெயிட்லோ ஆணைக்குழுவின் சிபார்சுக்கிணங்க, அரசாங்கம் 1970ம் ஆண்டு ஒரு புதிய கூட்டுறவுச் சட்டத்தை ஆக்கி அதன் துணையுடன் 1971ல் ஆரம்ப பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்களை ஸ்தாபிக்க வழி வகுத்தது. அச்சமயம் யாழ் குடா நாட்டில் இருபத்தொரு ஆரம்ப ப. நோ. கூ. சங்கங்கள் ஆரம்பிக்கப்பட்டன. நல்லூர் ப. நோ. கூ. சங்கமும் இவற்றில் ஒன்றாகும்.

நல்லூர், கொக்குவில் கிராமச்சபைகளை உள்ளடக்கிய திருநெல்வேலி, கல்வியங்காடு, கொக்குவில், கோண்டாவில், ஆனைக்கோட்டை, அன்னுங்கை, மஞ்சத்தடி ஆகிய பகுதிகள் அடங்கியன இச்சங்க எல்லைப்பரப்பாகும். இவ்வெல்லைப் பரப்புக்குள் இருந்த ஆறு பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்களும் ஐந்து பண்டகசாலைச் சங்கங்களும், நான்கு முன்னுள் யாழ் ப. நோ. கூ. சங்க சமாசங்களின் டிப்போக்களும், ஓர் குலைக்கப்பட்ட சங்கத்தையும் ஒன்றிணைத்து முன்னைய திருநெல்வேலி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் சொந்த மாடிக்கட்டிடத்தில் "ஆரம்ப திருநெல்வேலி ப நோ. கூ. சங்கம்" என 30-3.1971ல் பதிவு செய்யப்பட்டது. இச்சங்கத்தினை கொண்டு நடத்த திரு. ந. குமாரசுவாமி அவர்களை தலைவராகக் கொண்ட ஒன்பது பேர் அடங்கிய பணிப்பாளர் சபை உபவிதி 59ன் கீழ் கூட்டுறவு ஆக்க ஆணையாளர் அவர்களால் நியமனம் பெற்றது. மேற்குறிப்பிட்ட சங்கங்களின் சொத்துக்களையும் செல்மதிகளையும் இச்சங்கம் ஒன்றிணைத்து 26-6-71ல் பொறுப்பேற்றது. 1971ம் ஆண்டு பிற்பகுதியில் திரு. ந. குமாரசுவாமி அவர்கள் தலைவர் பதவியிலிருந்து இராஜினமா செய்தபின் உபதலைவர் திரு. இ. பொ. குமாரசாமி அவர்கள் சங்கத்தின் தலைவரானார். இச்சங்கம் 14 நுகர்ச்சிக் கிளைகளுடனும் 2 விவசாயக் கிளைகளுடனும் ஓர் பிடவை விற்பனை நிலையத்துடனும் ஆரம்பிக்கப்பட்டது. 14 நுகர்ச்சிக் கிளைகளுக்கும் 1972ம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆண்டு 14 கிளைக்குழுக்கள் தெரிவு செய்யப்பட்டு பொதுச்சபைஉறுப்பினர்களில் இருந்து ஐந்துபணிப்பாளர்கள் தெரிவு செய்யப்பட்டனர். அத்துடன் பணிப்பாளர் பிரதிநிதி ஒருவரையும் பணியாளர் சபைக்குத் தெரிவு செய்து பணிப்பாளர் சபையை 15 உறுப்பினர்களைக் கொண்டதாக இயங்கியது.

இச்சங்கத்தின் உறுப்பினர்களின் அபிலாஷைகளுக்கு அமைய சங்கத்தின் பெயர் 15-8-1975 ல் நல்லூர் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம் என மாற்றம் செய்யப்பட்டது

இச்சங்கம் படிப்படியாக மக்களின் முன்னேற்றம் கருதி புதிய கிளைகளையும் விற்பனை நிலையங்களையும் திறந்தது. கிழக்குக் கோண்டாவில் சந்தியில் விவசாயக்கிளை ஒன்றை ஆரம்பித்து இச்சங்க எல்லைப்பரப்புக்குள் உள்ள விவசாயிகளுக்கு மட்டுமல்ல, யாழ் மாவட்டத்திலுள்ள சகல விவசாயிகளுக்கும் விவசாய கிருமிநாசினி, உரம் போன்றவற்றை மொத்தமாகவும், சில்லறையாகவும் மலிந்த விலையில் விநியோகித்து நற்பெயர் பெற்றதுமன்றி, நல்ல இலாபத்தையும் ஈட்டியுள்ளது. திருநெல்வேலியில் உள்ள புடவை நிலையம் போன்று கொக்குவில் சந்தியிலும் கோண்டாவில் கிழக்கு சந்தியிலும் கோண்டாவில் ஸ்ரேசன் பகுதியிலும், கொக்குவில் மேற்கில் நுகர்ச்சியுடன் சேர்ந்த புடவை நிலையத்தையும் திறந்து வைத்து, விசேட தினங்களுக்கு மஞ்சத்தடி கல்வியங்காடு, அன்னுங்கை ஆகிய கிளைகள் மூலமும் மக்களுக்கு புடவை விநியோகம் செய்தும் வந்துள்ளது. திருநெல்வேலியிலும், கொக்குவில் சந்தியிலும் இரும்புக் கடைகள் திறக்கப்பட்டு இரும்பு வியாபாரத்தில் ஈடுபட்டுள்ளது. நுகர்ச்சியாளர்களின் நலன் கருதி கிளைகளும் விற்பனை நிலையங்களும் கொக்குவில் கிழக்கு, கோண்டாவில் கிழக்குச் சந்தி, கோண்டாவில் நாராயண, கோண்டாவில் வட மத்தி கொக்குவில் மத்தி, கொக்குவில் மேற்கு, திருநெல்வேலி காளி கோவிலடி, கலாசாலை வீதி, பரமேஸ்வராச் சந்தி, மூடமாவடி போன்ற இடங்களில் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. அன்னுங்கையில் சங்கத்திற்கு நன்கொடையாக அப்பகுதி மக்கள் காணி அன்பளிப்புச் செய்தபோதும் கிளை வசதி கருதி கொள்வனவு செய்யப்பட்ட நிலத்தில் ஓர் சொந்தக் கட்டிடம் கட்டி அப்பகுதி மக்களின் அபிலாஷையை பூர்த்தி செய்துள்ளது

விவசாயிகளின் கடன் தேவைகளைப் பூர்த்திசெய்ய இச்சங்கம் கொக்குவில், கோண்டாவில், திருநெல்வேலி எல்லையில் 24-7-73 ல் ஓர் கிராமிய வங்கியைத் திறந்து வைத்தது. தவிர்க்க முடியாத காரணங்களுக்காக் இக்கிராமிய வங்கி சங்க அலுவலகத்துடன் இணைக்கப்பட்டது. மக்கள் தேவைகளை பூர்த்தி செய்ய முடியாமை கண்டு மற்றுமோர் கிராமிய வங்கியும் கொக்குவில் மத்தியில் திறக்கப்பட்டது. இக்கிராமிய வங்கிகள் மூலம் விவசாயிகளுக்கு விவசாயக் கடன்கள், விதை உருளைக்கிழங்கு, மிளகாய், வெண்காயத்திற்கும் உற்பத்திக்கு உதவி வந்ததுடன், விரிவாக்க கடன் மூலம் ஏழை மக்களின் கஷ்டுடைக்க, வீடு கட்ட, வீடுதிருத்த, கிணறு தோண்ட, பழையகடன் தீர்க்க, பலவிதமான கடன்களும் கொடுத்து வந்தது. (கடன் பெறற விவசாயிகள் அக்கடனைத் திருப்பிக் கட்டாததால் கிராமிய வங்கிகள் மேலும் அதிக கடனை மக்கள் வங்கியிலிருந்து விவசாயிகளுக்கு கொடுக்கமுடியாதவர்களாக இருக்கின்றனர் என்பதை மிக வேதனையுடன் கூறவேண்டியுள்ளது.) ஏழை மக்கள் வட்டிக்குப் பணம் கொடுக்கும் பெரும் முதலாளிகளிடமிருந்து அதிக வட்டி கொடுத்துக் கடன் எடுப்பதை கருத்தில் கொண்டு நகை ஈடுபிடித்தல் தொழிலிலும் இக்கிராமிய வங்கிகள் ஈடுபட்டு வந்தன. இவ்விரு கிராமியவங்கிகளும் திறம்பட மக்களுக்குச் சேவை புரிந்து வந்த போதிலும் துர் அதிஷ்டவசமாக இவற்றைத் தற்காலிகமாக மூடவேண்டிய நிலைக்கு இச்சங்கம் தள்ளப்பட்டுள்ளது பணிப்பாளர்கள் இவ்விடயத்தில் மிக அக்கறை கொண்டு மீண்டும் இவற்றைத் திறந்து செயல்படுத்த முயற்சிகள் எடுத்து வருகின்றனர். விரைவில் அவர்களின் முயற்சி கைகூடும் என்பதில் நம்பிக்கையுண்டு.

விவசாயிகளின் உற்பத்திப் பொருட்களை (மிளகாய்) கொள்வனவு செய்து ஸ்ரீலங்கா கூட்டுறவு சந்தைப்படுத்தும் சபை, கூமொ வி. ஸ்தாபனம் போன்ற மற்றும் ஸ்தாபனங்களுக்கும் நுகர்ச்சியாளர்களுக்கும் கிளைகள் மூலமும் விற்பனை செய்து வந்துள்ளது. இதனால் பெறப்பட்ட மேலதிகத்தை விவசாயிகளுக்குப் பகிர்ந்து கொடுத்துள்ளார்கள். (இன்றைய சூழ்நிலையில் உற்பத்திப் பொருட்களை சங்கம் கொள்வனவு செய்ய இயலாத நிலையில் இருப்பினும் நுகர்ச்சியாளர்களுக்கு சிறு தொகையில் கொள்வனவு செய்து விநியோகம் செய்யலாம்) கமத்தொழில் ஆணையாளரிடமிருந்து கடன் பெற்று விவசாயிகளுக்கு நீர் இறைக்கும் இயந்திரங்களும் கடனுக்கு கொடுத்துள்ளதும் குறிப்பிடத்தக்கது.

தொழிலாளர்கள் வேலை இல்லாப் பிரச்சினைகளைத் தீர்க்கும் பொருட்டு பீடித்தொழிலில் ஈடுபட வறிய பெண்பிள்ளைகளுக்கு வேலை வழங்கியும், நெல் சந்தைப்படுத்தும் தொழில் ஒப்பந்தம் செய்து தொழிலாளிகளை வேலையில் அமர்த்தியும் கட்டிட ஒப்பந்தங்களைச் செய்தும் வேலைவாய்ப்பினை கொடுத்து வருகின்றது முதலாம் ஒப்பந்தத்தில் ரூபா 77000/- இலாபமாக எதிர்பார்க்கப்படுகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இச்சங்கம் 1971-ல் ஆரம்பமாகியபோது ஓர் சிறு முதலுடன் ஏறக்குறைய ரூபா 272187/- உடன் வியாபாரத்தில் ஈடுபட்டு 1971-/72 தொடக்கம் வருடா வருடம் முறையே ரூபா 6091590/- ரூபா 6528841/-. ரூபா 7791028/-, ரூபா 9802383/-, ரூபா 1388131/-. ரூபா 11499916/-, ரூபா 18340112/-, ரூபா22369963/- ஆக விற்பனைச் சுழற்சியை ஏற்படுத்தி விருத்தியடைந்து. 1971/72 தொடககம் முறையே இலாபமாக ரூபா 85109/-, ரூபா 105052/- ரூபா 166523/- ரூபா 31888/-, ரூ ா 63090/-, ரூபா 94118-75, ரூபா 198065/- ஈட்டியுள்ளது. 1974/75 இலா ம் ரூபா 31818-90 ஆகக் குறைந்ததிற்குக் காரணம் இல்லாமலிம்லே. அக்காலப் பகுதியில் திருநெல்வேலி பிடவைப்பகுதி தீக்கிரையாகியதால் ரூபா 93715-68 நட்டமேற்பட்டது. குறுகிய காலமாகிய 29–9–75—28–12–75 காலத்தில் ரூபா 16370/-ம் 1978-ம், ஆண்டு ரூபா 5140-47-ம் நட்டம் ஏற்பட்டது. இவற்றிற்குக் காரணம் முக்கியமாக விற்பனையில் வெளியாருடன் போட்டியிட வேண்டியிருந்ததும் வாகனம் ஒன்று அநிக காலம் இயங்காமலும். திருத்தச் செலவு அதிகமாக இருந்ததினாலும், ஒரு கிளையில் மட்டும் ஏறக்குறைய ரூபா 10000/- சோர்வு ஏற்பட்டதும் என்றும் கூறலாம். 197-ல் நுகர்ச்சியில் மட்டும் ரூபா 198065/- நிகர இலாபம் ஈட்டியுள்ளதென்பது மகிழ்ச்சிக்குரிய விடயம். இத்நிலையில் இன்றைய சங்க சொத்து முதலியன ரூபா 900000/- ஆகும்.

1977 யூலை மாதத்தில் 15 பேர் கொண்ட நெறியாளர் குழுவின் ஒன்பது நியமன அங்கத்தவர்களும் பணியாளர் பிரதிநிதியும் தவிர்ந்து புதிய பணிப்பாளர் சபை பதவியேற்றது. இதற்கு தலைவராகா திரு ஏ.எம்.எம்.குலநாயகம் (முன்னாள் மாவட்ட காணி உத்தியோகத்தரும், தற்போதைய உதவி அரசாங்க அதிபரும்—காணி) அவர்கள் நியமனம்செய்யப்பட்டார்கள். 1978-லும்திரு ஏ.எம் எம்.குலநாயகம் அவர்கள் தலைமையில் 9 பேர் கொண்ட நெறியாளர் குழு அமைக்கப்ப்ட்டது. திரு ஏ.எம் எம்.குலநாயகம்தனதுஓய்வுநேரத்தை சங்கத்திற்காக அர்ப்பணித்தார். இவரைத் தொடர்ந்து திரு. க. தர்மலிங்கம் அவர்கள் தலைமை தாங்கி சங்கத்தை நல்ல முறையில் நடாத்தி அரசாங்கத்தின் கொள்கைக்கமைய புதிய கிளைக்குழுத் தேர்தல்கள் நடாத்தி அதன் மூலம் மக்களிடம் சங்கத்தை ஒப்படைக்கும் பணியை நிறைவேற்றியுள்ளார்.

புதிய பணிப்பாளர் சபை 7 பேரைக்கொண்டதாகத் தெரிவு செய்யப்பட்டதாயினும் அரசாங்க ஆலோசனையின் பெயரால் 4 நியமனம் பெற்றவர்களும் அடங்கியுள்ளனர். இப்பணிப்பாளர் சபைக்கு இளைப்பாறிய அதிபர் திரு. சி. க. அன்டுறு அவர்கள் தலைவராகவும். திரு. ந. அருணாசலம் அவர்கள் உபதலைவராகவும், தெரிவு செய்யப்பட்டனர். இவ்வாண்டில் பணிப்பாளர்களின் விடாமுயற்சியால் ஓர் விறகுகாலை ஸ்தாபித்து மக்கள் பல ஆண்டுகளாக எதிர்பார்த்த தேவை பூர்த்தி செய்யப்பட்டுள்ளது மேலும், கோண்டாவில் திருநெல்வேலி ஆகிய இடங்களில் விறகுகாலையை ஸ்தாபிக்க முயற்சிகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

இச்சங்கம் வருடா வருடம் ஈட்டிய லாபத்தில் அங்கத்தவர்களுக்குபங்கீடு செய்யும் பணியையும் நிறைவேற்றியுள்து. 1971/74 ஆண்டு கால வரையில் ஈட்டிய இலாபத்தில் நுகர்வோருக்கு இலாபப் பங்கீடும், அங்கத்தவர்களுக்கு பங்கு மீது வட்டியும் பணியாளர்களுக்கு நன்கூலியும் வழங்கப்பட்டது. மகிழ்ச்சிக்குரியது. 1975/77 வரை காலத்தின் பணியாளர்களின் நன்கூலி இவ்வருடத்தில் கொடுபட்டதும் குறிப்பிடத்தக்கது. இலாபப்பங்கீடு செய்யும் சங்கங்கள் மிகக் குறைவு எனலாம். ஆகவே இச்சங்கம் இலாபப்பங்கீடு செய்து வருவதை பாராட்டாமலிருக்க முடியாது.

''காய்த்தமரம் கல்லெறி வாங்குவது'' போன்று பல கோணங்களிலிருந்து சங்கங்கள் குறைகேளாமல் தமது பணியைப் புரியமுடியாது. கூட்டுறவுச் சங்கம் மக்கள் ஸ்தாபனம் என்ற கோதாவில் பலரும் பலமாதிரி குறைகூறுவது இயல்பு. இச்சங்கம் ஆற்றிவரும் சேவையை பொதுமக்கள் சிறுசிறு குறைபாடுகள் இருந்த போதும் பாரட்டாமலில்லை.

இச்சங்கப் பணிப்பாளர் சபை, தமது நிர்வாகத்தைப் பரவலாக்கி பல உபசபைகளை ஆக்கி, பொதுச்சபை உறுப்பினர்களை கிளைக்குழு உறுப்பினர்கள் ஆகியோரில் சிலரை உபசபையில் சேர்த்து சங்கத்தை நன்றே நடாத்த அவர்களின் ஆலோசனைகளை பெற்று நடைமுறைப்படுத்தப்படுகின்றனர்.

சங்கப் பணியாளர்களைப் பொறுத்தமட்டில் கூட்டுறவு ஆணையாளர் அவர்களின் ஆட்பணி சிபார்சுகளுக்கு அமைவாகவும் வேலையாளர் ஆணைக்குழுச் சட்டத்தின் பிரகாரமும் தகுதியுடையவர்கள் வேலையாளர் ஆணைக்குழுவின் அனுமதி பெற்று பணிபுரிந்து வருகிறார்கள் இச்சங்கப் பணியாளர்களின் தரம்உயர்ந்தவை என பல கூட்டுறவு இலாகா உத்தியோகத்தர்கள் பரவலாக கூறுவதைக் கேட்டு மகிழ்ச்சி அடைகின்றேன்.

1976 ம் ஆண்டு யாழ் மாவட்ட ப. நோ கூ. சங்கங்களிடையே நடைபெ ற போட்டியில் இச்சங்கம் மூன்றும் இடத்தைப் பெற்றதையும்நினைவுப த்த விரும்புகின்றேன். எப்போதும் இலாகாவின் புத்திமதிகளையும் ஆலோசனைகளையும் இச்சங்கம் பெற்று நற்பெயருடன் மேலும் மேலும் வளர்ச்சியடைய பிரார்த்திப்பதுடன் இக்கட்டுரையை எழுதப்பணித்த பணிப்பாளர்களுக்கும் எனது நன்றி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கூட்டுறவு இயக்கம் — சில பிரச்சினைகள்

பேராசிரியர் க. கைலாசபதி
கலைப்பீடத் தலைவர், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

கூட்டுறவைப் பற்றிப் பேசும் பொழுதெல்லாம் பொதுவாக இலங்கையரும் சிறப்பாக வடமாகாணத்தவரும் பெருமைப்பட்டுக் கொள்வதுண்டு. ஆசியாவிலே கூட்டுறவு இயக்கம் நன்கு வேரூன்றிய நாடுகளிலே இலங்கையும் ஒன்று என்ற கருத்து பொதுவாகப் பலராலும் ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது. எந்த ஒரு இயக்கத்திலும் ஏற்ற இறக்கங்கள் காணப்படுதல் போல, இலங்கையின் கூட்டுறவு இயக்கத்திலும் நிலைமாற்றங்கள் ஏற்பட்டிருக்கின்றன. நவீன கூட்டுறவு இயக்கம் இந்நாட்டில் உதயமாகி ஏறத்தாழ ஏழு தஸாப்தங்கள் முடிவடைந்துவிட்டன. எழுபதாண்டு வரலாற்றை நுணுகி ஆராயவேண்டியது கூட்டுறவு இயக்கத்தில் ஈடுபட்டிருப்போரது கடமையாகும்.

இன்று உலக ரீதியாகக் கூட்டுறவு இயக்கம் பல முக்கியமான பிரச்சினைகளை எதிர் நோக்குகிறது. நவீன கூட்டுறவுச் சிந்தனைகள் இந்தியா இலங்கை முதலிய நாடுகளுக்கு வந்து சேர்ந்தபொழுது அதாவது சென்ற நூற்றாண்டின் இறுதிக்காலில் இந்தியாவிலும் இந் நூற்றாண்டின் முதல் தஸாப்தத்தில் இலங்கையிலும் ஆங்கிலேய ஆட்சியாளரால் கூட்டுறவு இயக்கம் அறிமுகப்படுத்தப்பட்ட பொழுது இருந்த உலக அமைப்பிற்கும் இன்றைய உலக நிலைக்கும் எத்தனையோ வேறுபாடுகள் உள்ளன. ஏகாதிபத்திய நாடுகள் சில, உலகின் கணிசமான பகுதியை ஆண்ட காலக்கட்டத்திலே கூட்டுறவு இயக்கம் இங்கு முளைவிட்டது. இன்று மூன்றாவது உலகநாடுகள் அணியில் இலங்கை இந்தியா முதலியன இடம் பெற்றுள்ளன 1911 ம் வருடம் இலங்கைச் சட்ட நிருபண சபையில் கூட்டுறவுக் கட்டளைச் சட்டம் நிறைவேற்றப்பட்ட பொழுது முதலாளித்துவ பொருளாதார அமைப்பே உலகின் பிரதான பொருளியல் அமைப்பாக விளங்கியது 1917 ம் வருடம் ரஷ்யாவில் நிகழ்ந்த சோஷலிஸ்ட் புரட்சிக்குப்பின் உலகின் பல நாடுகளிலும் உருவாகிய மாற்றங்களின் பயனாக இன்று சோஷலிஸ பொருளாதார அமைப்பு கணக்கில் எடுத்துக்கொள்ளப்பட வேண்டியதாகத் திகழ்கிறது. இந்நூற்றாண்டின் தொடக்கத்தில் பிரிட்டிஷ் சாம்ராச்சியம், "சூரியன் அஸ்தமிக்காத நிலப்பரப்பைக் கொண்டதாக" பரந்து உலகளாவியதாக இருந்தது. இன்றோ பொருளாதாரப் பிரச்சினைகள் மலிந்த மேற்கு ஐரோப்பிய நாடுகளில் ஒன்றாக, பழங்காலப் பெருமையின் நினைவுகளுடன் காலந்தள்ளுகிறது இவ்வாறு கடந்த ஏழு தஸாப்தங்களில் எத்தனையோ மாற்றங்கள் நடந்தேறிவிட்டன. இத்தகைய மாற்றங்களின் விளைவாகக் கூட்டுறவு இயக்கமும் புதிய சவால்களையும் தேவைகளையும். எதிர்நோக்கவேண்டியிக்கிறது.

## வரலாற்றுப் பின்னணி

முதலிலே வரலாற்று அடிப்படையில் இரண்டொரு விஷயங்களைக் கவனிப்போம்.. உலகின் பல்வேறு சமதாயங்களில் புராதன காலத்திலிருந்தே கூட்டுறவுச் சிந்தனைகள் நிலவிவந்திருப்பினும் பத்தொன்பதாம் நூற்றாண்டிலேயே அவை முறைமையான வடிவம் பெற்றன. மேற்கத்திய நாடுகளிலே கைத்தொழிற்புரட்சி தோற்றுவித்த முரண்பாடுகளின் விளைவாகச் சமுதாயங்களிலே ஏற்பட்ட துன்பதுயரங்களுக்கு ஓரளவு நிவாரணங் காணுமுகமாக உழைக்கும் மக்களிற் சிலர் ஒன்று சேர்ந்து நிறுவிய நாணய சங்கத்தினடியாகவே கூட்டுறவு இயக்கம் பரிணமித்தது இங்கிலாந்திலே இது ஆரம்பமாகியது. ஆயினும் ஜெர்மனி, பிரான்சு முதலிய நாடுகளிலே அந்நாடுகளின் பொருளாதார கலாசார பின்னணிகளுக்கு இயைய வெவ்வேறு இயல்புகளைப் பெற்றது. இங்கு கவனிக்க வேண்டியது யாதெனில், ஆரம்பத்திலிருந்தே கூட்டுறவு இயக்கம் ஏழைகளின் நண்பனாகவே இயங்கி வந்தது. ஐரோப்பாவிலே கைத்தொழிற் புரட்சி உத்வேகம் பெற்ற வேளையிலே உதயமாகிய கூட்டுறவு இயக்கம், அதே ஐரோப்பிய நாடுகளிற் பல கைத்தொழிற் பின்னணிலே வளர்ச்சியை அடைந்துவிட்ட வேளையிலும் பொருத்தமுடையதாகவே உள்ளது.

கூட்டுறவு என்ற கருத்துப் படிவம் காலத்தோடு ஒட்டி வளரும் பெற்றியுடையதாய் இருக்கின்றது என்பதனையே அதன் வரலாறு நமக்குத் தெளிவுறுத்துகிறது. அதனாலேயே கூட்டுறவின் பண்பும் பணியும் பற்றி பொருளியலாளரும் சமூகவியலாளரும் அதிக அக்கறை கொண்டுள்ளனர். இலட்சியமயமான கூட்டுறவுப் பொதுநல அமைப்பைக் கனவுகண்ட ஆரம்பகாலக் கூட்டுறவாளரிலிருந்து, வளர்முக நாடுகளில் பொருளாதார அபிவிருத்தியிலே கூட்டுறவியக்கம் எத்தகைய பங்கை வகிக்கலாம் என்று மதிப்பீடு செய்யும் திட்ட அமுலாக்கல் அதிகாரிகள் வரையில் கூட்டுறவை விவரித்து விமர்சித்து விளக்கியிருப்போர் பலராவர். கூட்டுறவு என்னும் கோட்பாட்டை நுண்ணிய ஆய்விற்கு உட்படுத்தி அதன் பலவீனங்களை எடுத்துரைத்திருப்போரும் உள்ளனர். அடிப்படையில் கூட்டுறவு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இரு முக்கிய கூறுகளைக் கொண்டது. ஒன்று அதன் இலட்சிய – தார்மீக அம்சம். மற்றொன்று அதன் நடைமுறைப் பயன்பாட்டு அம்சம். இவ்விரண்டில் ஒன்றை அழுத்திக் கூறுவோர் பிரத்தியேக சூழ்நிலைக்கேற்ப கூட்டுறவிற்கு விளக்கம் கூறுவோராவர் பர்மாவில் கூட்டுறவுப் பதிவாளர் 1946 ம் வருடத்து அறிக்கையில் பின்வருமாறு எழுதியிருந்தார். ''கூட்டுறவு என்பது வியாபாரம், ஒழுக்கம் ஆகிய இரு துறைகள் சம்பந்தப்பட்ட அளவில் ஒரு முதியோர் கல்வித்திட்டமாகும். ஆகவே அதன் வெற்றிக்கு இரு விஷயங்கள் இன்றியமையாதவை: பயனுறுதியுடைய போதனை; தகைதிறமுடைய மேற்பார்வை'' கூட்டுறவின் இலட்சியத்தன்மையையும் செய்முறைப்பாங்கினையும் இம்மேற்கோள் தெளிவுறுத்துகிறது: இன்றைய உலகிலே கூட்டுறவு இயக்கம் இவ்விரு அம்சங்களையும் வழங்க வேண்டியுள்ளது. தன்னிச்சையாக இயங்கும் நிறுவனமாகக் கூட்டுறவு இருக்கக்கூடிய சூழ்நிலைகளிலே கூட்டுறவாளர்கள் அதன் இலட்சிய தார்மீக - அம்சங்களை முதன்மைப்படுத்தி விவரிப்பர். அரசாங்கங்களின் கட்டுப்பாடு சட்டதிட்டங்களால் வழிநடத்தப்படும் கூட்டுறவாளர்கள் அதன் செய்முறை அம்சங்களைச் சிறப்பாக விவரிப்பர். முன்னவர்களுக்கு கூட்டுறவு இயக்கத்தின் முடிவும் விளைவுமே முக்கியம். பின்னவர்களுக்கு அது வழிவகையாகவே அமைகிறது: ஆயினும் கூர்ந்து நோக்கினால் இரண்டு அம்சங்களும் ஒன்றுக்கொன்று அநுசரணையானவை என்பது புலப்படும்.

## இலட்சியவாத மனோபாவம்

கூட்டுறவின் இலட்சியவாத நோக்கிற்கு அது எழுந்த காலத்து சமுதாயவியற் சிந்தனைகள் சில ஏதுக்களாயமைந்தன. குறிப்பாக இங்கிலாந்திலும் வேறு சில ஐரோப்பிய நாடுகளிலும் பத்தொன்பதாம் நூற்றுண்டிலே முகிழ்த்த கற்பனாவாத சோஷலிஸம் கூட்டுறவாளர்களின் உணர்வைக் குறிப்பிடத்தக்க அளவு பாதித்தது. பெரும்பாலான கற்பனாவாத சோஷலிஸ்டுகள் முதலாளித்துவ அமைப்பையும் அரசையும் ஏற்றுக் கொண்டவர்கள் சொத்துரிமை, தொழிற்போட்டி என்பவை சமுதாயத்திற்கு இயல்பானவை என்றும் அவர்கள் கருதினர். சரியான விநியோகம், ஒத்துழைப்பு இன்மையாலும் உற்பத்திக்கும் நுகர்வுக்குமிடையே சமநிலையின்மையாலுமே வறுமையும் இடும்பையும் சமுதாயத்தில் நிலவுவதாக அவர்கள் எண்ணினர். இயல்பாகவே மனிதனும் மனித சமுதாயமும் நாடும் நன்மையானது பேராசை பழிபாவத்துக்கஞ்சாமை ஒழுங்கற்ற பொருளாதார நிர்வாகம் ஆகியவற்றுல் சீர்குலைக்கப்பட்டுள்ளது. என்றும், மக்கள் ஒற்றுமைப்பட்டுக் கூட்டுறவு மார்க்கத்தைக் கைகொள்ளுவதன் மூலம், சமத்துவமான பொதுவுடமைப்பண்புவாய்ந்த ஒரு சமுதாயத்தை நிருமாணிக்கலாம் என்றும் அவர்கள் கூறினர். அது ஒரு கனவாக இருந்தது. கற்பனாவாத சோஷலிஷ்டுகளே ''கூட்டுறவுப் பொதுநல அமைப்பு' என்ற கோட்பாட்டுக்கு வடிவம் கொடுத்தனர். கூட்டுறவின் இலட்சிய வேகத்தை ரஷ்யப் புரட்சியாளர் இளவரசர் கிராப்போத்கின் (1842—1921) கூற்று ஒன்றிலே இனங்கண்டு கொள்ளலாம். அராஜகவாதத்தின் தலைவர்களில் ஒருவராகவும் சித்தாந்தவாதியாகவும் தேசாந்தரியாகவும் விளங்கிய கிராப்போத்கின் பரஸ்பர உதவி என்னும் நூலிலே மேல்வருமாறு எழுதினுர்.

> ''சமூக உணர்வுகளும் சிறப்பாக, நீதி நியாயம்
> பற்றிபழக்கமான பொது மனப்பாங்கில் அமைந்த
> ஒரு கூட்டுஉணர்வும் ஒத்திசைவான அளவு வளர்ச்சியடையாவிட்டால், சமுதாயங்களிலே வாழ்தல்
> முற்றிலும் இயலாததாகிவிடும்''

கூட்டுறவாளர்கள் அடிக்கடி எடுத்துக்காட்டும் இம்மேற்கோள் கூட்டுறவின் சமூகப்பண்பினைத் துலக்கிக்காட்டுகிறது. கூட்டுறவின் செய்முறைப் பண்பினை அளவுக்கு விஞ்சி வற்புறுத்துகிறவர்கள் ''நீதி நியாயம் பற்றிய மனப்பாங்கினை'' கைநெகிழ விட்டுவிடுகின்றனர் என்று பலர் சுட்டிக் காட்டுவர். ரொபர்ட் ஓவன் (1771—1858) என்ற மாபெரும் ஆங்கிலேயக் கற்பனாவாத சோடிலிஸ்டிலிருந்து இன்று வரையில் இலட்சிய வாதக் கூட்டுறவாளர்கள் தார்மீக—மானசீக—அம்சங்களைச் சிலாகித்துப் பேசுவர்.

கற்பனாவாத சோஷலிஸ்டுகளைக் காரசாரமாக விமர்சித்த கார்ல் மாக்ஸ் (1818–1883) கூட்டுறவின் மூலம் புதியதொரு சமுதாயத்தை உருவாக்கலாம் என்ற வாதத்தை நிராகரித்தார். வறுமை, சுரண்டல், அநீதி முதலியனவற்றை எதிர்ப்பதற்குக் கூட்டுறவு வலுவற்ற ஆயுதம் என்று அவர் கருத்துரைத்தார். பிரெஞ்சு நாட்டுப் பொருளியலாளரும் சமூகவியளாளரும் அராஜக வாதத்தின் மூலவர்களில் ஒருவருவான பியேர் ஜோஸெப் புருதோன் (1809–1865) என்பார் நடத்தித் தோல்வி கண்ட கூட்டுறவு முயற்சிகளை உதாரணம் காட்டி சமுதாய சமத்துவத்தை நிலை நாட்டுவதற்குத் தன்னிச்சை நிறுவனமான கூட்டுறவு சக்தியற்றது என்றும், சமுதாய நிலைமையை உள்ளவாறு பேணுவதற்கே அது பெரிதும் பயன்படும் என்றும் விமர்சகர்கள் வாதிட்டனர். இவ்வாறு நவீன கூட்டுறவு இயக்கத்தின் ஆரம்பத்திலேயே அதற்குச் சாதகமாகவும் பாதகமாகவும் தத்துவவாதிகளிடையே அபிப்பிராயங்கள் நிலவின;

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடிப்படையில் மாறுபட்ட கருத்தோட்டங்கள் இருந்தபோதும், வாழ்வியல் தேவைகளினால் உந்தப்பட்டுப் பலர் கூட்டுறவை வளர்த்து வந்துள்ளனர். குறிப்பாக நாணய சங்கங்கள்: நுகர்வோர் சங்கங்கள் உலகெங்கிலும் பெருகின. உதாரணமாக நமது நாட்டை எடுத்து நோக்கினால், 1912–1949 காலப்பகுதியில் அதாவது நாடு அரசியல் விடுதலை பெற்ற காலம் வரையில் ஆயிரத்து தொள்ளாயிரத்து ஐம்பத்தொன்பது நாணய சங்கங்களும், மூவாயிரத்து எண்ணூற்று எண்பத்தேழு கூட்டுறவுக் கடைகளும் இயங்கின. கூட்டுறவு அடிப்படையில் அமைந்த உற்பத்தி நிறுவனங்கள் மிகச்சிலவே இருந்தன. கூட்டுறவின் அடிப்படை வளர்ச்சி நெறியை இப்புள்ளி விபரம் காட்டுவதாயுள்ளது. அதுபோல விவசாயத்துறையில் கூட்டுறவு பங்களித்திருக்கும் அளவிற்கு முற்பகுதியிலே கைத்தொழில் உற்பத்தித் துறையில் கூட்டுறவு செயற்பட்டு வந்தது எனக் கூறவியலாது. பொதுவான இவ்வரலாற்றுப் பின்னணியிலே கூட்டுறவு இயக்கம் உலக ரீதியாக இன்று எதிர்நோக்கும் பிரச்சினைகளைச் சிறிது நோக்குவோம்.

சமூக உணர்வு நீதியுணர்வு முதலிய தார்மீக - ஆன்மீக – விழுமியங்களை ஒரு கணம் ஒதுக்கி வைத்துவிட்டு, கூட்டுறவின் செயற்பாட்டை நோக்கினால் அதன் பண்பும் பணியும் பொருளியல் சம்பந்தமானது என்பது வெளிப்படை. இன்றைய உலகப் பொருளாதார அமைப்புகளை பொதுப்படையில் மூன்று பெரும் பிரிவுகளாக வகுத்துக் கூறலாம். (1) முதலாளித்துவ அமைப்பைக் கொண்ட நாடுகளை ஒரு பிரிவில் அடக்கலாம். மேற்கு ஐரோப்பிய நாடுகள், அமெரிக்கா, ஜப்பான் முதலிய கைத்தொழில் வளர்ச்சி நாடுகள் இப்பிரிவின் தலையாய நாடுகளாயுள்ளன. வேறு பல நாடுகளும் இப்பிரிவில் இடம்பெறுவன. முதலாளித்துவப் பொருளாதார அமைப்புள்ள சமுதாயங்களிலே தனியார் மேற்கொள்ளும் தொழிற்றுறை வர்த்தக முயற்சிகளே அபிவிருத்திக்கு அடித்தளமாகவும் அளவுகோலாகவும் கொள்ளப்படுகின்றன. தனியார் துறையைச் சேர்ந்த தொழிற்றுறை உரிமையாளரின் செயல்களே – இலாப நோக்குடன் அவர்கள் புதிது புதிதாகத் தோற்றுவிக்கும் முதன் முயற்சிகளே— அபிவிருத்திக்கு அச்சாணியாக உள்ளன என்று அந்நாடுகளில் நம்பப்படுகிறது. ‘சுதந்திர வர்த்தகம்’, ‘சுதந்திர முதலீடு’, ‘கட்டுப்பாடற்ற வணிகம்’ முதலியன அவ்வமைப்பின் தாரக மந்திரங்கள். (2) சோஷலிஸ அமைப்பைக் கொண்டியங்கும் நாடுகளை இன்னொரு பிரிவில் அடக்கலாம். சோவியத் யூனியன், சீனு, யூகோசிலாவியா, கொரியமக்கள் குடியரசு முதலாம் பல நாடுகள் இப்பிரிவிற்குச் சான்றாக உள்ளன. இந்நாடுகளில் தனியார் துறைக்கு முக்கியத்துவம் கிடையாது. சிறு விஷயங்களிலும் நுணுக்க விவரங்களிலும் இந்நாடுகளுக்கிடையே சிலபல வேறுபாடுகள் இருப்பினும், அடிப்படையில் இவை அரசின் திட்டமிட்ட நெறியிலேயே அபிவிருத்தியை மேற்கொள்ளுவன. அரசின் முயற்சியே தலையானது (அண்மையில் சோஷலிஸ நாடுகள் சிலவற்றிலே தனியார் முயற்சிகளுக்கு ஓரளவு அங்கீகாரம் வழங்கப்பட்டிருப்பினும் பொதுத்துறை ஏற்பாடுகளுடன் ஒப்பிடுமிடத்து அவை புறக்கணிக்கக் கூடியனவே பேரளவினவாய தேசிய அபிவிருத்தித் திட்டங்களை மத்திய அரசாங்கமே முற்று முழுதாகப் பொறுப்பேற்று அமுல் நடத்துகையில் பொருளாதாரத்துறையில் தன்னிச்சை நிறுவனங்களுக்கு அத்துணை வாய்ப்பில்லை என்றே கருதவேண்டும். (3) தாராண்மைக் கொள்கை அல்லது கலப்புப் பொருளாதாரக் கொள்கையின் அடிப்படையில் அமைந்த நாடுகளைப் பிறிதொரு பிரிவில் அடக்கலாம் ஆசிய ஆபிரிக்க நாடுகளிற் பல இப்பிரிவைச் சேர்ந்தனவே முற்கூறிய இரு பொருளாதார அமைப்புகளின் நல்லம்சங்களை ஏற்று நடைமுறைப்படுத்த இந்நாடுகள் எத்தனிக்கின்றன. இந்தியா போன்ற பெரிய நாடும் தான்சானியா போன்ற சிறிய நாடும் இப்பிரிவில் அடங்கும். அரசாங்கத்தின் பாத்திரம் எத்தகையது என்பதை அளவுகோலாகக் கொண்டு இந்நாடுகளிடையே வித்தியாசங்களைக் கண்டு கொள்ளலாம் பன்முகப்படுத்தப்பட்ட பொருளாதார அமைப்மைப் பொறுத்தவரையிலும் இந்நாடுகளுக்குள் சிற்சில வேறுபாடுகள் உண்டு

## வளர்முக நாடுகளில்

இன்று எங்கு பார்த்தாலும் திட்டமிடல், அமுலாக்கல், அபிவிருத்தி, வாழ்க்கைத் தரத்தை உயர்த்துதல் என்ற கோஷங்கள் ஓங்கி ஒலிக்கக் காண்கிறோம். துரித அபிவிருத்தியே வளர்முக நாடுகளின் பிரதான குறிக்கோளாய் இருக்கிறது. ஆகையால் கூட்டுறவையும் அபிவிருத்தி நோக்கிலேயே அளவிடவும் மதிப்பிடவும் பலர் முற்படுகின்றனர். அபிவிருத்தித் தேவைகளுக்கு ஈடு கொடுக்கும் சக்தி வாய்ந்ததாக அது இருக்கிறதா? இவ்வடிப்படை வினு, வெவ்வேறு வடிவங்களிலே வளர்முக நாடுகளிலே எழுப்பப்படுகிறது. பின்வரும் வினுக்கள் அண்மைக்காலத்தில் அடிக்கடி கேட்கப்படுகின்றன.

சமூக பொருளாதார மாற்றங்களை உண்டாக்கக் கூடிய கருவியாக கூட்டுறவு அமைப்பு இருக்கிறதா? எத்தகைய சூழ்நிலைகளில் அவ்வாறு அது அமைகிறது? கூட்டுறவு அமைப்புகள், நிறுவனங்கள் அனைத்திற்கும் அடிநாதமான இயல்புகள் இருக்கின்றனவா? கூட்டுறவின் உப பிரிவுகளுக்கு பிரத்தியேகமான இயல்புகள் அல்லது பண்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புகள் உண்டா? அடிப்படைப் பண்புகள் மாறாத் தன்மையனவா? மரபுரீதியாகக் கூட்டுறவு பற்றிக் கூறப்பட்டு வந்தவை வளர்முக நாடுகளின் இன்றைய நிலைமைக்குப் பொருத்தமுடையனவா? 'கூட்டுறவுப் பொதுநல அமைப்பு' என்ற கோட்பாடு இன்றைய உலகில் அர்த்தமுடையதா? கூட்டுறவு சாதிக்கக் கூடிய உச்சச் செயலெல்லையும் அதற்கென அமைந்த தனிச்சிறப்பான செயல்முறையும் உண்டா? இத்தகைய வினாக்களுக்கு விடையிறுத்தல் எளிதன்று. ஆயினும் இவற்றுக்கு உகந்த விடைகள் கண்டாலன்றி எந்த ஒரு நாட்டிலும் கூட்டுறவு பயனுள்ள முறையில் வளர்ச்சியடைதல் சாத்தியமல்ல.

இங்கு மீண்டும் பழைய கேள்வி ஒன்றை எழுப்பவேண்டியுள்ளது. கூட்டுறவு நிறுவனம் ஒரு சத்சங்கமா அல்லது தொழிற்றுறைத்தாபனமா? சத்சங்கம் என்பது நல்லோர் — பரோபகாரிகள்— தமக்கென வாழாப் பிறர்க்குரியாளர் — கூடிய இடம். தொழிற்றுறைத் தாபனம் என்பது உற்பத்தியையோ அன்றி விநியோகத்தையோ சிக்கனமாகத் திறம்படச் செய்து முடிக்கும் ஒரு நிறுவனம். அது இலாபம் சம்பாதிக்கவும் வேண்டும். கூட்டுறவில் இரண்டு அம்சங்களும் உண்டு என்று சமரசம் பேசலாம். ஆனால் நடைமுறையில் இரண்டில் ஒன்று மேலோங்குவதையே நாம் காணக்கூடியதாயுள்ளது. சில செல்வந்த நாடுகளிலும் கூட்டுறவு நன்னிலை எய்தியுள்ளது; சில வறிய நாடுகளிலும் நன்கு வேரூன்றியுள்ளது. இலட்சிய வேகமும் நடைமுறைத்திறனும் இணைந்து செயற்படும் பொழுதே இயக்கம் வெற்றியடைகிறது.

## சிறந்த உதாரணங்கள்

உதாரணமாக டென்மார்க் தேசத்தில் விவசாயம், கால்நடை வளர்ப்பு முதலிய துறைகளில் கூட்டுறவு இயக்கம் மகத்தான சாதனைகளைக் கண்டுள்ளது. அந்நாட்டுக் கிராம சமூகங்களின் வளம் கூட்டுறவையே ஆதாரமாய்க் கொண்டது. ஆனால், அதே பிரதேசத்திலுள்ள நோர்வே, சுவீடன், பின்லாந்து ஆகிய நாடுகளிலும் ஐரோப்பாவிலே ஆஸ்திரியாவிலும் இங்கிலாந்திலும் நுகர்வோர் அதாவது பாவனையாளரின் இயக்கமாகவே கூட்டுறவு வெற்றிகண்டுள்ளது. இந்தியாவிலே விவசாயத்துறையில் நாணய சங்கங்கள் (சில மாநிலங்களில் மாத்திரம்) மிகத் திறம்படச் செயலாற்றி வந்துள்ளன. இலங்கையில் உணவுப் பொருட்கள் (மிகச் சமீப காலம் வரையில்) மானிய விலையிலே பங்கீட்டு முறையில் வழங்கப்பட்ட ஒழுங்குமுறை நிலவியமையால், கூட்டுறவுச் சங்கக்கடைகள் தனிச்சிறப்புடையனவாய் விளங்கின. வெவ்வேறு வரலாற்றுக் காரணிகளும் பிரத்தியேக சூழ்நிலைகளும் கூட்டுறவு இயக்கத்தின் சிற்சில பிரிவுகளுக்கு வாய்ப்பாயமைந்து விடுகின்றன உதாரணமாக கிழக்கு ஆபிரிக்காவிலே கூட்டுறவுக்குச் சாதகமான சூழ்நிலை உருவாகியது. ஆபிரிக்க நாடுகள் பலவற்றுக்குச் சுதந்திரம் கிடைத்த வேளையில் காலனித்துவ ஆட்சியின் தீமைகள் அனைத்தும் குறைவின்றியிருந்தன. பொதுமக்களின் உணவுத் தேவைகள் புறக்கணிக்கப்பட்டு காசுப்பயிர்களே பெருந்தோட்டங்களில் உண்டாக்கப்பட்ட நிலைமையிருந்தது; கைத்தொழில்கள் அந்நியரின் கையில் இருந்தன. அதுவரை இருந்த கூட்டுறவு அமைப்பும் காசுப்பயிர்களை உண்டாக்கவும் சந்தைப்படுத்தவுமே பயன்பட்டது. சுதந்திரத்திற்குப்பின் மூலதனம் தேவைப்பட்டபொழுது, கூட்டுறவின் அடிப்படையிலேயே சிறுசிறு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. அண்மைக்காலத்தில் கூட்டுறவு இயக்கம் அங்கு உற்பத்தியிலும் சேவைகளிலும் கவனஞ்செலுத்தத் துவங்கியுள்ளது. கால்நடை வளர்ப்பு, கோழிப்பண்ணை, பால்பண்ணைகள், மீன்பிடித் தொழில் முதலியன புதிய கூட்டுறவு நிறுவனங்களால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. பலவகைப்பட்ட போக்குவரத்துச் சேவைகளும் கூட்டுறவு அடிப்படையில் செயற்பட்டு வருகின்றன. தங்கம், வைரம் முதலியன அகழ்ந்தெடுக்கும் சுரங்க வேலைகள்கூட கூட்டுறவு முறையில் செய்யப்படுகின்றன. எனினும், பாவனையாளர் சங்கங்களே உச்ச நிலையை அடைந்துள்ளன, வெளிநாட்டார் கைகளிலிருந்த மொத்த சில்லறை வியாபாரங்களைப் பொறுப்பேற்று நடத்துவதற்குக் கூட்டுறவுக் களஞ்சியங்கள் உருவாகின. உதாரணமாக தான்சானியாவிலுள்ள கூட்டுறவு விநியோகச் சங்கங்களின் சமாஜம் (கொசாதா) மாபெரும் நிறுவனமாகும். நாட்டின் சில்லறை வியாபாரத்தில் முப்பது சதவீதம் அதன் மூலமாகவே நடைபெறுகின்றது. தான்சானியாவில் கூட்டுறவு இயக்கம் தேசிய தினசரி ஒன்றையும் நடத்துகின்றது. கலப்புப் பொருளாதார அமைப்புடைய தான்சானியா, சோஷலிசப் பாதையில் அடியெடுத்திருப்பதாலும் கூட்டுறவு அங்கு உத்வேகத்துடன் இயங்குகிறது எனலாம். கிழக்கு ஐரோப்பிய நாடுகளில் போலந்தும், மத்திய ஐரோப்பாவில் யூகோசிலாவியாவும் கூட்டுறவு இயக்கத்துக்குப் புதிய பரிமாணங்களை அளித்துள்ளன, சீனாவிலே கூட்டுப் பண்ணைகள் (கம்யூன்கள்) அமைக்கப்படுமுன் கூட்டுறவு விவசாயம் படிக்கல்லாக அமைந்தது சீன வரலாற்றிலே பரஸ்பர உதவிக் குழுக்கள் முக்கியத்துவம் பெற்று வந்துள்ளன.

சீனாவிலே ''பரஸ்பர உதவி'' என்ற கோட்பாடு பலகாலமாக மக்கள் மத்தியிலே - குறிப்பாக ஏழைவிவசாயிகளிடையே ஆழமாக வேரூன்றியிருந்தமையால் இரண்டாவது உலகப் போர் நிகழ்ந்த காலத்திலும் அதற்குப் பின்னரும் அந்நாட்டில் கூட்டுறவு இயக்கம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செழித்து வளர்ந்தது. ஆயிரத்துத் தொள்ளாயிரத்து முப்பதுகளில் துவங்கி ஜப்பான், சீனாவின் கிழக்குக் கரையோரப் பட்டினங்களையும் நகரங்களையும் மெல்லமெல்லத் தனது கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவந்திருந்தது. ஷங்ஹாய் போன்ற பெருநகரிலேயே சீனத் தொழிலாளர்களிற் கணிசமான பகுதியினர் வாழ்ந்தனர். அது அந்நியர் வசமாயிற்று சீனாவின் ''உள்பகுதி'' பின்தங்கிய பிரதேசமாகவும் புற உலகுடன் தொடர்பு துண்டிக்கப்பட்ட தொன்றாகவும் இருந்தது. அந்நிலையிலே ரெவி அலீ என்ற நியூசிலாந்துக்காரரினதும் எட்கார் சினோ என்ற அமெரிக்கப் பத்திரிகையாளரினதும் ஆலோசனையின் பேரில் ''கூட்டுறவுக் கைத்தொழில்'' இயக்கம் ஆரம்பிக்கப்பட்டது Indusco என்று சுருக்கமாக அழைக்கப்பட்ட பெயரில் இயங்கிய அக் கைத்தொழில் இயக்கம் உலகப் பிரசித்திபெற்றது. போதிய மூலப் பொருட்களும், பாதுகாக்கப்பட்ட சந்தையும், தக்க தலைமையும் வாய்க்கும் பொழுது கூட்டுறவு இயக்கம் உற்பத்தித் துறையில் எத்தகைய அருஞ்சாதனைகளைப் புரியலாம் என்பதை யுத்தகால சீனக் கூட்டுறவு இயக்கம் காட்டியது. ஆயினும் சியாங்கைஷேக் அரசாங்கம் அதனை முழுமையாக வளரவிடவில்லை. அதே காலப் பகுதியிலும் பின்னரும் கம்யூனிஸ்டுகளின் கட்டுப்பாட்டில் இருந்த பிரதேசங்களிலும் கூட்டுறவு இயக்கம் சோஷலிஸ நடவடிக்கைகளுக்கு அநுசரணையாக நடத்தப்பட்டது. கைத்தொழில் ஜனநாயகம் என்று பொதுமக்களால் அழைக்கப்பட்ட கூட்டுறவு இயக்கம், ஐக்கிய முன்னணியின் பொருளாதார வெளிப்பாடாகவும் அமைந்தது. சீனக்கம்யூனிஸ்டுகள் கிராமப்புறங்களை வென்றெடுத்து வந்த காலக்கட்டத்தில், கூட்டுறவு இயக்கத்தின் மூலம் பொது மக்களுக்குப் பொருளியல், அரசியல், நிர்வாகம், முகாமைத்துவம் முதலியவற்றில் நடைமுறை ரீதியான கல்வி புகட்டினர். கூட்டு வாழ்க்கைக்கு முதற்படியாகவும், ஆரம்ப சிட்சையாகவும், மாஓசேதுங் கூட்டுறவு இயக்கத்தைக் கணித்தார். கூட்டுறவின் பயிற்சியாலேயே கூட்டுப்பண்ணைகள், கூட்டுவாழ்க்கைமுறை என்பன பின்னர் பிரமிக்கத்தக்க வகையில் வளர்ச்சியடைந்தன. இந்தியாவிலே கூட்டுறவு இயக்கம்பூதான, சர்வோதய இயக்கங்களுடன் நெருங்கிய தொடர்புடையதாய் விளங்குகிறது கிராம அபிவிருத்திக்குக் கூட்டுறவு பெருந்தொண்டாற்ற முடியும் என்பதை இந்திய, தான்சானிய, ஜப்பானிய பரிசோதனைகள் சில நிரூபித்துள்ளன

இறுதி ஆய்விலே ஒன்று கூறலாம். இன்று எந்த நாட்டிலும் அரசின் ஆதரவின்றிக் கூட்டுறவு இயங்குதல் கடினம். ஆனால் அரசு அளவிற்கு மீறித் தலையிடும் பொழுதும் இயக்கம் குன்றுகிறது. அதே வேளையில் அரசியல் தத்துவங்களின் செல்வாக்கிலிருந்தும் கூட்டுறவு இயக்கம் முற்றிலும் தப்பிவிட இயலாது. இவை யாவற்றுக்கும் மேலாக மக்கள் இயக்கமாக அமைந்தாலன்றி அது பூரணத்துவத்தை அடைய முடியாது ''எவ்வழி நல்லர் ஆடவர்; அவ்வழி நல்லை வாழிய நிலனே''

---

''மக்களை முன்னேற்ற, வாழ்க்கைத் தரத்தை உயர்த்த சுதந்திரத்தைப் பலப்படுத்த உள்ள ஒரு கருவி கூட்டுறவுச் சங்கங்கள் என்பதை உலகில் உள்ள எல்லா அரசாங்கங்களும் நன்குணர்ந்துள்ளன. எனவே மக்கள் எய்த விரும்பும் உயரிய இலட்சியங்களை அடைவதற்குக் கூட்டுறவுச் சங்கங்கள் உதவும் பொருட்டு அரசாங்கம் காவல் நாயாகவும், நடுவராகவும், ஒத்திசைவை ஏற்படுத்தும் நிறுவனமாகவும் இயைவு ஊக்கியாகவும் செயல் புரியவேண்டும். வருமானத்தைத் திரட்டுவதல்ல இறுதி இலட்சியம். புறக்கணிக்கப்பட்ட பெரும்பாலான மக்களை ஒன்றுதிரட்டி நாட்டின் பொருளாதார அபிவிருத்தியில் உண்மையான வலுவுள்ள சக்தியாக அவர்களை ஆக்குவதே நோக்கமாக இருத்தல் வேண்டும்.''

வால்டர்

''கூட்டுறவு என்பது அரசின் கட்டுப்பாடு அல்ல. அரசின் கட்டுப்பாட்டை விட ஆபத்தானது எதுவுமில்லை. அது அழிவைத் தழுவுவதற்குச்சமம். நல்லதோ கெட்டதோ அரசின் கட்டுப்பாடு இருக்குமானால் அது கூட்டுறவே அல்ல. எங்கே மக்கள் அரசு சார்பற்ற மக்கள் — முனைப்புடன் தங்களை ஈடுபடுத்திக் கொள்கிறார்களோ அங்கே அந்த இயக்கம் செழித்து வளர்ந்துள்ளது. எப்போதுமே அரசாங்கமே பேணி வளர்க்கப்படும் சூழ்நிலையில் இயக்கம் வளரவில்லை, நான் இதைத் திரும்ப திரும்பச் சொல்வேன்... சொல்லிக் கொண்டே இருப்பேன்... கடனுதவி கொடுத்து உதவும் முகவராக இருப்பதைத் தவிர வேறு வகையில் கூட்டுறவில் அரசு இணைந்திருப்பதை நான் விரும்பவில்லை''

— பண்டித நேரு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# போட்டிப் பொருளாதார அமைப்பில் கூட்டுறவின் இயக்கம்

இ. சுப்பிரமணியம் B. A. இல.
பெறுப்பதிகாரி
கூட்டுறவுப் பயிற்சிக் கல்லூரி
யாழ்ப்பாணம்.

ஒரு நாட்டிலுள்ள மக்கள் அனைவரும் உற்பத்தி பங்கீடு, நுகர்வு போன்ற பொருளாதார முயற்சிகளில் சுயேட்சையாகவும், சுதந்திரமாகவும் இயங்கக் கூடிய சூழ்நிலை நிலவுகின்ற பொருளியல் அமைப்பு போட்டிப் பொருளாதார அமைப்பு எனப்படும். இத்தகைய அமைப்பிலுள்ள மக்கள் அனைவரும் அரசின் பொருளியல் கொள்கைகளுக்கு முரண்படாத வகையில் பொருளியல் முயற்சிகளில் ஈடுபடப் பூரண சுதந்திரம் பெற்றிருக்கின்றனர். பொருளியல் போட்டி அரசாங்க, தனியார், கூட்டுறவு நிறுவனங்களின் திறமைக்கும் உற்பத்திச் சிறக்குமியல்பிற்கும் வழிவகுக்கக் கூடியதாக உள்ளது.

போட்டிப் பொருளியல் அமைப்பில் கூட்டுறவின் இயக்கம் பற்றி ஆய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும் முதன் முதலாக போட்டி உயிர்நாடியாக விளங்குகின்ற முதலாளித்துவ மண்ணில் தான் கூட்டுறவு இயக்கம் தோன்றி உயிரும் உருவமும் பெற்றது. 19ம் நூற்றுண்டில் இங்கிலாந்தில் முதலாளித்துவப் பொருளியல் அமைப்பு கொழுந்து விட்டுப் பிரகாசித்துக் கொண்டிருந்த பொழுது தான் கூட்டுறவியக்கம் தோன்றியது கூட்டுறவின் கோட்பாடுகளும் விதிகளும் முதலாளித்துவப் பொருளியல் அமைப்பில் தான் தோன்றி வளர்ச்சி கண்டன. போட்டிப் பொருளியலமைப்பு நிலவுகின்ற இங்கிலாந்து, சுவிடின், டென்மார்க், கனடா போன்ற நாடுகளில் கூட்டுறவியக்கம் மிகச் சிறப்பாக இயங்கிக் கொண்டிருக்கின்றது.

இன்று இலங்கையிலும் போட்டிப் பொருளாதார அமைப்பு அமுலுக்குக் கொண்டு வரப்பட்டிருக்கின்றது. நாட்டு மக்கள் அனைவரும் அரசின் பொருளியல் கொள்கைக்கு முரண்படாத வகையில், பொருளியல் முயற்சிகளில் ஈடுபட அனுமதிக்கப்பட்டிருக்கின்றனர் அரசாங்க தனியார் கூட்டுறவு நிறுவனங்கள் உற்பத்தி, முதலீடு, சேமிப்பு, பங்கீடுபோன்ற பொருளியல் முயற்சிகளில் ஈடுபட்டு வருகின்றன.

இந்நிலையில் இலங்கைக் கூட்டுறவியக்கம் போட்டிப் பொருளாதார அமைப்பில் தொழிற்பட வேண்டியதாக இருக்கின்றது. உற்பத்தி, பங்கீடு போன்ற துறைகளில் கடந்த காலங்களில் கூட்டுறவு நிறுவனங்கள் பெற்றிருந்த தனியுரிமைச் சலுகைகள் யாவும் இன்று நீக்கப்பட்டு விட்டன. இன்று கூட்டுறவு நிறுவனங்கள் தனியார் நிறுவனங்களுடனும் அரசாங்கம் நிறுவனங்களுடனும் போட்டி போட்டுத் தொழிலாற்ற வேண்டிய நிலையில் இருக்கின்றன.

போட்டிப் பொருளாதார அமைப்பில் இயங்கிக்கொண்டிருக்கும் கூட்டுறவு நிறுவனங்கள் தீர்த்தி செய்யமுடியாத பல பிரச்சினைகளை எதிர்நோக்கிக் கொண்டிருக்கின்றன. வியாபாரத் திறனும் மூதல், பலமும், தொழில் நுட்பமும், ஒருங்கே அமையப்பெற்ற தனியார் நிறுவனங்களுடனும், அரசாங்க நிறுவனங்களுடனும், பாரிய கம்பனிகளுடனும் விவசாயிகளையும் தொழிலாளர்களையும் உறுப்பினராகக் கொண்ட பொருளாதாரப் பலமற்ற கூட்டுறவு நிறுவனங்கள் போட்டியிடுவது கடினமாகும். ஆயினும் போட்டிப் பொருளியல் அமைப்பில் கூட்டுறவு நிறுவனங்கள் தமது திறமையை அதிகரிக்க அரியதோர் வாய்ப்பு இப்போது ஏற்பட்டிருக்கின்றது.

போட்டிப் பொருளாதார அமைப்பில் கூட்டுறவு நிறுவனங்கள் வெற்றியீட்டுவதற்கு அவை தமது திறமையையும் சேவையையும் விஸ்தரித்து அங்கத்தவர்களுக்கும் பொதுமக்களுக்கும் மிகச் சிறந்த பொருளாதார சமூகச் சேவையை நல்குவதன் மூலமே கூட்டுறவு நிறுவனங்கள் வெற்றி பெற முடியும். அரசாங்க நிறுவனங்களிலும் தனியார் நிறுவனங்களிலும் பெறுகின்ற சேவையைவிட கூட்டுறவு நிறுவனங்களில் உச்சச் சேவையைப் பெறலாமென்ற எண்ணக் கருவை மக்கள் மனதில் பதியவைப்பதன் மூலமே போட்டிப் பொருளாதார அமைப்பில் கூட்டுறவு நிறுவனங்கள் உயிர்வாழ முடியும்.

கூட்டுறவுச் சங்கங்களின் திறமையையும் சேவையையும் அதிகரிக்கும் பொறுப்பு கூட்டுறவு நிறுவனங்களின் நெறியாளர் குழுவின் கையிலும் கூட்டுறவுப் பணியாளர்களின் கையிலுமிருப்பதினால் சகல பணியாளர்களும், நெறியாளர்குழு உறுப்பினர்களும் தமது பொறுப்பை உணர்ந்து நேர்மையாகவும் கடமையுணர்வுடனும் கடமை புரிந்தால் கூட்டுறவு நிறுவனங்களின் வெற்றியை எவராலும் தடுக்க முடியாது.

எமது நாட்டிலே போட்டிப் பொருளாதார அமைப்பு அமுலுக்கு கொண்டுவரப் பட்ட பொழுது கூட்டுறவு நிறுவனங்கள் தனியார் நிறுவனங்களுடன் எதிர்நிற்க முடியாதென்றே கூட்டுறவாளர் அஞ்சினர். ஆனால் எமது கூட்டுறவுப் பணியாளர்களினதும், நெறியாளர் குழு உறுப்பினர்களினதும் தளராத ஊக்கம் எமது சங்கங்க

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ளுக்கு வெற்றியைக் கொடுத்துள்ளது. சில கூட்டுறவு நிறுவனங்கள் பல பிரச்சினைகளை எதிர்நோக்கினாலும் அநேகமான சங்கங்கள் வெற்றிகரமாக இயங்க முடியுமென்பதை நிரூபித்துக்காட்டிய பெருமை கூட்டுறவுப் பணியாளருக்கே உரியதாகும்.

ப. நோ. கூ. சங்கங்கள் தரமான பொருட்களை, நியாயமான விலையில் பாவனையாளர்களுக்கும் அங்கத்தவர்களுக்கும் விநியோகிப்பதன் மூலமே போட்டிப்பொருளாதார அமைப்பில் வெற்றிபெற முடியும். சங்கங்கள் தமக்கு வேண்டிய பொருட்களை தனிப்பட்ட மொத்த வியாபாரிகளிடம் கொள்வனவு செய்வதினால் பல சிக்கல்களை எதிர் நோக்க வேண்டியுள்ளது.

தனியார் நிறுவனங்கள் பொருட்களின் விலையையும் சந்தையையும் தாம்நினைத்தவாறு கட்டுப்படுத்துகின்றன. தனியார்மொத்த வியாபாரிகள் கூட்டுறவுச் சங்கங்களுக்கு தரமான பொருட்களை நியாயமான விலையில் விநியோகிக்காமல் தரமற்ற பொருட்களை கூடிய விலையில் விநியோகிக்கின்றன சில அரசாங்க நிறுவனங்கள் கூட தரமற்ற பொருட்களைக் கொள்வனவு செய்யுமாறு ப. நோ. கூ. சங்கங்களைக் கட்டாயப் படுத்துகின்றன. இதனால் கூட்டுறவு நிறுவனங்கள் ஏனைய நிறுவனங்களின் சுரண்டலுக்கு ஆளாவதுடன் அங்கத்தவர்களுக்கும், வாடிக்கையாளர்களுக்கும். சிறந்த சேவையை நல்க முடியாமல் இருக்கின்றது.

தனியார் நிறுவனங்களுடனும் அரசாங்க நிறுவனங்களுடனும் போட்டிப் பொருளாதர அமைப்பில் கூட்டுறவு நிறுவனங்கள் போட்டியிட்டு வெற்றியீட்டுவதற்கு கூட்டுறவு நிறுவனங்கள் ஒன்று சேர்ந்து சமாசங்களை நிறுவ வேண்டியது தவிர்க்க முடியாதவொன்றாகும் இலங்கையிலுள்ள கூட்டுறவு நிறுவனங்களுள். மிகப் பலம்வாய்ந்த நிறுவனங்களாக உள்ள ப. நோ. கூ. சங்கங்களுக்கிடையே ஒருங்கிணைப்பை ஏற்படுத்த சமாசம் நிறுவப்படாமை பெரியதோர் குறைபாடாகும் அச்சமாசங்கள் மூலம் தமக்குத் தேவையான தரமான பொருட்களை வெளிநாடுகளிலிருந்தும் உற்பத்தியாளர்களிடமிருந்தும் நேராக இறக்குமதி செய்து பெற்றுக் கொள்ள வேண்டும். இதன் மூலம் கூட்டுறவு நிறுவனங்கள் வாடிக்கையாளர்களுக்கு தரமான பொருட்களை நியாயமான விலையில் சரியான அளவு நிறையில் விநியோகித்துத் திறம்படத் தொழிலாற்ற முடியும்.

கூட்டுறவு நிறுவனங்கள் யாவும் ஒன்றுபட்டு ஒரு அணியில் இயங்குவதே போட்டிப் பொருளியல் அமைப்பில் வெற்றியீட்டுவதற்குச் சிறந்த வழியாகும் கூட்டுறவு நிறுவனங்களுக்கிடையே நிலவுகின்ற போட்டி, பகை என்பன தவிர்க்கப்படவேண்டும். கூட்டுறவுச் சங்கங்களுக்கிடையே கூட்டுறவு ஏற்படுத்தப்பட வேண்டும். பலம் வாய்ந்த நிறுவனங்கள் பலம் குன்றிய நிறுவனங்களுக்கு உதவி புரிய வேண்டும். கூட்டுறவு நிறுவனங்கள் கூட்டுறவு நிறுவனங்களின் உற்பத்திப் பொருட்களை ஆதரித்து அவற்றைச் சந்தைப்படுத்த முனைவரவேண்டும். இவ்வித முயற்சிகள் மூலம் கூட்டுறவு நிறுவனங்கள் போட்டிப் பொருளாதார அமைப்பில் வெற்றியீட்ட வேண்டும்

போட்டிப் பொருளாதார அமைப்பில் கூட்டுறவு நிறுவனங்கள் வெற்றி பெறுவதற்கு நிறுவனத்தின் உயிர்நாடியாக விளங்குகின்ற அங்கத்தவர்களும் பணியாளர்களும் நிறுவனத்துடன் இணைக்கப்படவேண்டும். நியாயமான சம்பளத்திட்டங்களையும் ஊக்குவிப்புத் திட்டங்களையும் சமூக நலத்திட்டங்களையும் உருவாக்கி அமுலாக்குவதன் மூலம் கூட்டுறவு நிறுவனங்கள் பணியாளர்களின் அன்பையும் ஆதரவையும் பெற்றுப் போட்டிப் பொருளாதார அமைப்பில் வெற்றி பெறலாம் அங்கத்தவர்களைச் சங்கத்துடன் இணைப்பதற்கும் சங்கத்தில் கரிசனை கொள்ளச் செய்வதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் கூட்டுறவின் சிறப்பியல்புகளைப் பற்றியும் அதனை ஆதரிப்பதினால் ஏற்படும் பலாபலன்களைப் பற்றியும் கருத்தரங்குகள், துண்டுப்பிரசுரங்கள், படக்காட்சிகள் மூலம் பிரசாரம் செய்ய வேண்டும்.

கூட்டுறவு நிறுவனங்களின் தொழிற்பாட்டை விஸ்தரித்து மக்கள் மத்தியில் நன் மதிப்பை அதிகரிப்பதன் மூலம் போட்டிப் பொருளாதார அமைப்பில் திறம்பட தொழிலாற்ற முடியும். மக்களுக்குத் தேவையான பொருட்கள் யாவற்றையும் விற்பனை செய்தல், புதிய கிளைகளையும் மொத்த நிலையங்களையும் தேவைக்கு ஏற்ப உருவாக்குதல், புதிய முயற்சிகளை உருவாக்கி நடத்தல், கிளைகளை நவீனப் படுத்துதல், நடமாடும் விற்பனைச் சேவையை உருவாக்குதல், கிளை நிலயங்களில் சில்லறைக் காசுக் கொள்வனவு முறையையும், பண்டமாற்று விற்பனை முறையையும் அமுலுக்குக் கொண்டு வருதல், பாவனையாளரின், வசதிக்கு ஏற்ப கிளைகளைத் திறக்க, பூட்ட ஏற்பாடு செய்தல், விளம்பரம் காட்சிப்படுத்தலும், பொது சனத் தொடர்பு நடவடிக்கைகள் மூலம் பாவனையாளரைச் சங்கத்தின்பால் ஈர்க்கச் செய்தல், கிளைக்குழுவை உற்சாகப்படுத்தி இயங்கச் செய்தல், கிளைகளில் மகளிர் குழுக்களை நிறுவி மகளிரின் கவனத்தை சங்கத்தின்பால் ஈர்த்தல் போன்ற நடவடிக்கைகளை துரிதமாக மேற்கொள்வதன் மூலம் கூட்டுறவு நிறுவனங்கள் போட்டிப் பொருளாதார அமைப்பில் வெற்றி பெற முடியும்.

---

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கூட்டுறவுக் கொள்கைகளும் நடைமுறையும்

கே. சண்முகலிங்கம்
(சிரேஷ்ட கூட்டுறவு உதவி ஆக்க ஆணையாளர்)

## கூட்டுறவு என்றால் என்ன ?

சமூக வாழ்வின் அடிப்படையாக அமைவது கூட்டுணர்வு, ஆதி காலம் முதல் மனிதர்கள் கூட்டாகவே வாழ்க்கை நடத்தி வந்துள்ளார்கள். பொருளியல் உற்பத்தியில் சமூக உறவு முறைகளும் கூட்டு வாழ்க்கையை ஆதாரமாகக் கொண்டுள்ளன. எனினும் கூட்டுறவு இயக்கம் என்று நாம் கூறும்பொழுது ஆதிகாலம் முதல் மனித சமூகத்தில் நிலவிவரும் கூட்டு வாழ்க்கை என்ற கருத்தைக் குறிப்பிடவில்லை. மக்கள் ஒன்றாகச் சேர்ந்து தமது பொருளியல் முன்னேற்றத்தை இலக்காகக் கொண்டு நடத்தும் ஸ்தாபனங்களை அல்லது சங்கங்களை உள்ளடக்கும் கருத்திலேயே "கூட்டுறவு இயக்கம்" என்ற தொடர் உபயோகிக்கப்படுகிறது.

## கூட்டுறவுக் கொள்கைகள் :-

கூட்டுறவுக் கொள்கைகள் என்பன கூட்டுறவு இயக்கத்தின் வளர்ச்சிப் போக்கில் உருவாகி, இன்று கூட்டுறவாளர்களால் பின்பற்றப்பட்டு வரும் தத்துவங்களைக் குறிக்கின்றன. இக்கொள்கைகள் கடந்த 125 வருட காலத்தில் உருவானவையாகும். கூட்டுறவு இயக்கம் 1844-ம் ஆண்டில் ரொச்டேல் என்ற இடத்தில் ஆரம்பிக்கப்பட்டது. இதை ஆரம்பித்தவர்களை ரொச்டேல் முன்னோடிகள் என்று அழைப்பர். இங்கிலாந்தில் ஏற்பட்ட பொருளாதார மாற்றங்களின் காரணமாக ஏழைகள் வாழ்வு நிலை குலைந்தது. வறுமையிலும் துன்பத்திலும் உழன்ற அவர்கள் தமது வாழ்வை முன்னேற்றுவதற்குரிய மார்க்கமாகக் கூட்டுறவினைத் தேடினர். இவ்வியக்கம் கைத்தொழில் மாற்றங்கள் ஏற்பட்டு வந்த ஜேர்மனி, பிரான்ஸ் முதலிய நாடுகளிலும் இலங்கை, இந்தியா போன்ற அபிவிருத்தி குறைந்த நாடுகளிலும் படிப்படியாக வளர்ச்சியுற்று இன்று உலகளாவிய இயக்கமாக உள்ளது.

கூட்டுறவு இயக்கத்தின் வளர்ச்சிப் போக்கில் படிப்படியாக உருவாகிய கொள்கைகளைச் செம்மைப்படுத்தி உலக நாடுகளில் உள்ள சகல கூட்டுறவாளர்களும் ஏற்றுக்கொள்ளக்கூடிய வகையிடு வகுக்கும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன, சர்வதேச கூட்டுறவு ஒன்றியம் (I. C. A.) என்னும் அமைப்பு 1937 1966 ஆகிய ஆண்டுகளில் கூட்டுறவுக் கொள்கைகள் யாவை என்பது பற்றிய அறிக்கைகளை வெளியிட்டது. இதன் 1966-ம் ஆண்டு முடிவின்படி ஆறு கொள்கைகள் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளன; அவையாவன:-

(1) தடையற்றதும் சுயேச்சையானதுமான அங்கத்துவம்.
(2) ஜனநாயக ஆளுகை.
(3) முதலிற்கு மட்டான வட்டி.
(4) லாபத்தைச் சமமாக அங்கத்தவரிடையே பங்கிடுதல்,
(5) கூட்டுறவுக் கல்வி.
(6) கூட்டுறவுச் சங்கங்களிடையே கூட்டுறவு.

## தடையற்ற அங்கத்துவம்

எவ்விதமான செயற்கைக் கட்டுப்பாடுகளோ, சமூக, அரசியல், இன, மதபேதங்களோ இன்றி யாவரும் அங்கத்தவர்களாகச் சேருவதற்கு உரிமை இருத்தல் வேண்டும். அத்தகைய தடையற்ற அங்கத்துவம் இல்லாதவிடத்து ஒரு ஸ்தாபனம் கூட்டுறவுச் சங்கம் என்ற பெயருக்கு அருகதை உடையதன்று. இதேபோன்றே மக்களை நிர்ப்பந்தப்படுத்தி ஒரு அமைப்பில் சேர்க்கும் இடத்தும் அவ்வமைப்பு கூட்டுறவுக் கொள்கைக்கு முரண்பட்டதாகிவிடும். அங்கத்துவம் தடையற்றதாக் இருப்பதோடு சுயேச்சையானதாயும் இருத்தல் வேண்டும்.

## ஜனநாயக ஆளுகை.

கூட்டுறவுச் சங்கங்கள் ஜனநாயக அமைப்புக்களாகும்: அவற்றின் அலுவல்கள் அங்கத்தவர்களால் தெரிவு செய்யப்பட்ட அல்லது நியமிக்கப்பட்ட உறுப்பினர்களால் நடத்தப்படல் வேண்டும். ஒரு அங்கத்தவருக்கு ஒரு வாக்கே இருத்தல் முடியும் கூடியளவு பங்குப்பணம் கட்டிய ஒருவருக்குப் பல வாக்குகள் அளிக்கும் உரிமைக்கு கூட்டுறவில் இடம் இல்லை. சாதி, இனம், மதம், பால் என்ற வேறுபாடுகளைக் கடந்து யாவரும் சமத்துவமான உரிமை உடையவர்களாகச் செயற்படும் தாபனமே கூட்டுறவுத் தாபனமாகும்.

## முதலிற்கு மட்டான வட்டி

தனிநபர் ஒருவர் மூலதனத்தை இட்டு தமக்கு லாபத்தை ஈட்டிக்கொள்ளுவதற்கு உரியவகையில் அமையும் தாபனம் அல்ல கூட்டுறவுச் சங்கம். சேவையே அதன் பிரதான நோக்கு. லாபநோக்கு கூட்டுறவிற்கு முரணானது. அதனால் தான் சங்கத்திற்கு பங்கு முதலைக் கொடுத்தவருக்கு வட்டி கொடுத்தால் அவ்வட்டி மட்டுப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

டுத்தப்பட்ட அளவு விதத்தில் இருத்தல் வேண்டும் என்று கூறப்பட்டுள்ளது. கூட்டுறவுச் சங்கத்தின் முதல் பின்வரும் வகையில் பெறப்படலாம்.

(அ) அங்கத்தவரின் பங்கு முதல்.

(ஆ) சங்கம் ஈட்டிய லாப மூலம் சேர்ந்த முதல்.

(இ) வெளியில் இருந்து பெறப்பட்ட கடன்

இவற்றுள் முதலாவதாகக் கூறப்பட்ட பங்கு முதலிற்கு வட்டி கொடுக்கப்படின் அது மட்டான வட்டியாக இருத்தல் வேண்டும். வட்டி முற்றாகக் கொடுக்கப்படாவிடினும் பாதகமில்லை, இரண்டாவதாகக் குறிக்கப்பட்டுள்ள சங்கம் ஈட்டிய லாபத்திற்கு வட்டி அவசியமற்றது. வெளியில் இருந்து பெறப்படும் பணத்திற்கு வட்டி கொடுத்தல் தவிர்க்க இயலாதது. பங்கு முதலிற்கு மட்டான வட்டி என்னும் கொள்கை கூட்டுறவுத்தாபனம் லாபத்தை நோக்கமாக உடையதல்ல என்னும் தத்துவத்தின் அடிப்படையில் அமைந்தது

## லாபத்தை சமமாக அங்கத்தவரிடையே பங்கிடுதல்

லாபம் கூட்டுறவு இயக்கத்தின் நோக்கம் அல்ல என்பது முன்னர் குறிப்பிடப்பட்டது. எனினும் வியாபார நடவடிக்கையின் போது கிடைக்கும் லாபத்தை அங்கத்தவரிடையே பகிர்ந்தளிப்பதன் மூலம் தனிநபர் லாப வேட்டைக்கு இடமில்லாமல் போகும். சங்கத்தில் தொழிற்பாட்டால் ஏற்படும் மிச்சம் அல்லது மேலதிகம் எந்த அங்கத்தவர்க்கும் பாதகம் இல்லாத முறையில் சமமாகப் பங்கிட்டு அளிக்கப்படல் வேண்டும். இது பின்வரும் வகையில் உறுப்பினர்களின் தீர்மானத்துடன் செய்யப்படலாம்.

(அ) கூட்டுறவுச் சங்கத்தின் வியாபார அபிவிருத்திக்காக உபயோகித்தல்.

(ஆ) பொதுச் சேவைகள்

(இ) சங்கத்துடன் வைத்திருந்த தொடர்புக்கு ஏற்ப உறுப்பினர்களுக்குப் பகிர்ந்து கொடுத்தல்.

## கூட்டுறவுக் கல்வி

வறுமையிலும் துன்பத்திலும் உழன்ற தொழிலாளர்களால் சமூகத்தின் கீழ்மட்டத்தில் வாழும் பெரும்பான்மையினரான உழைப்பாளி மக்களால் உருவாக்கப்பட்டது கூட்டுறவு இயக்கம் என ஆரம்பத்தில் குறிப்பிட்டேன். வறுமையும் கல்வி அறிவின்மையும் ஒன்றிணைந்தே காணப்படுகின்றன. அறிவின்மை வறுமையின் விளைவு. நமது வாழ்வை முன்னேற்றுவதற்கு ஒரு வழியாக கூட்டுறவைத் தேர்ந்தெடுத்த உழைப்பாளி மக்கள் கூட்டுறவு இயக்கத்தில் சேரும் அங்கத்தவர்களின் கல்வி விருத்தியை தமது பிரதான கொள்கையாக வகுத்துக்கொண்டனர். ஒரு நூற்றாண்டு கழிந்தபின் இன்றுங்கூட இக்கொள்கையின் முக்கியத்துவம் குறைந்து விடவில்லை. ஏழைகள் இயக்கமான கூட்டுறவின் முக்கிய கொள்கையாக அமையவேண்டியது கல்வி. தமது உறுப்பினர்க்கும் உத்தியோகத்தர்களுக்கும் தொழிலாளர்களுக்கும் பொதுமக்களுக்கும் ஜனநாயகத் துறையிலும், பொருளாதாரத் துறையிலும், கூட்டுறவுக் கொள்கைகளை விளக்கிக் கொடுப்பதற்கான ஒழுங்குகளைச் சங்கங்கள் செய்தல் வேண்டும்.

## கூட்டுறவுச் சங்கங்களிடையே கூட்டுறவு.

கூட்டுறவு இயக்கம் போட்டிப் பொருளாதாரச் சூழலில் இயங்குகிறது. லாபநோக்கினைப் பிரதானமாகக் கொண்டது முதலாளித்துவ பொருளாதார அமைப்பு. இச்சூழலில் கூட்டுறவாளர்கள் தேசிய ரீதியிலும் சேர்ந்து இயங்கினால்தான் வெற்றி பெறுதல் இயலும். எல்லாக் கூட்டுறவு அமைப்புக்களும் தங்கள் உறுப்பினர்க்கும் சமுதாயத்திற்கும் முடிந்தளவு திருப்தியான சேவை செய்யும் வகையில் கிராமம், மாவட்டம் தேசம் என்ற பல்வேறு மட்டங்களிலும் சர்வதேச ரீதியிலும் ஒன்றிணைந்து செயல்படல் வேண்டும்.

இலங்கை இந்தியா போன்ற அபிவிருத்தி குறைந்த நாடுகளில் கூட்டுறவு இயக்கம் குடியேற்ற நாட்டு ஆட்சியின் கீழ் தோன்றியது. இந்நாடுகள் சுதந்திரம் பெற்ற பின்னர் ஏற்பட்ட அரசியல், சமூக மாற்றங்கள் பொருளியல் துறையில் அரசாங்கத்தின் பங்கினை முக்கியத்துவப்படுத்துவதற்குக் காரணமாயிற்று. அரசு சமூகநலச் சேவைகளை அளிப்பதிலும் பொருளியல் விருத்திக்கான வசதிகளைச் செய்வதிலும் முக்கிய கவனம் செலுத்தியது. இதனால் கூட்டுறவு இயக்கத்தைத் தனது நோக்கங்களை அடைவதற்கு ஒரு கருவியாகப் பயன்படுத்தலாயிற்று. கூட்டுறவு இயக்கத்தில் அரசின் தலையீடு விரும்பத்தக்க பல நன்மைகளை அளித்துள்ள போதிலும் பல குறைகளுக்கும் இடம் அளித்துள்ளது. அரசின் தலையீட்டினால் கூட்டுறவு இயக்கத்தின் அடிப்படையான கொள்கைகள் சிலவற்றில் இருந்து விலகவேண்டி ஏற்பட்டது. உதாரணமாக கூட்டுறவுச் சங்கங்களின் பணிப்பாளர் சபைக்கு அரசியல்வாதிகளின் சிபார்சின்படி பணிப்பாளர்களை நியமித்தல் ஜனநாயக ஆளுகை என்னும் கொள்கைக்கு முரணானது எனக் கூறப்படுகிறது. கூட்டுறவு இயக்கத்தில் அரசின் தலையீடு எவ்வகையிலும் இடம் பெறக்கூடாது என்று கூறுதலும் விவாதத்திற்கு உரிய பிரச்சனை. எனினும் கூட்டுறவின் அடிப்படைக் கொள்கைகளையே தூக்கி எறிந்து விடுதலோ, அவற்றினை முற்றாகப் புறக்கணித்தலோ கூட்டுறவு இயக்கத்தை தவறான பாதைக்கே இட்டுச் செல்லும்.

நன்றி: ஐக்கியதீபம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கூட்டுறவும் மகளிரும்

## மனோன்மணி - சண்முகதாஸ்

தேசத்தோடொத்து வாழ்'' என்றும் ஊருடன் கூடிவாழ்'' என்றும் எமது பெண்ணினத்தின் பிரதிநிதியாகிய ஔவைப்பிராட்டி அன்று கூறிச் சென்றுள்ளார். அவரது நோக்கிலே இக்கூற்றுக்கள் கூட்டுறவின் முக்கியத்தை வலியுறுத்துகின்றன. யாதும் ஊரே யாவரும் கேளிர் என்ற பொதுக் கோட்பாடு நிலவியகாலத்தில் ஔவையாரும் அத்தகைய கருத்தினைக் கொண்டிருந்ததில் வியப்பில்லை. ஆனால் பெண்ணினத்தை சேர்ந்தவரென்ற நோக்கில் அவருக்கு ஏற்பட்ட இக்கூட்டுறவு உணர்வு பெண்களாகிய எம்மனோர்க்கு இன்று முன்னோடி வாக்குகளாக அமைந்திருப்பதைக் காணமுடிகிறது.

தேசம் ஊர் என்ற இருசொற்களும் பெண்கள் சமூகத்தைப் பொறுத்தவரையில் மிகுந்த முக்கியத்துவமுடையவை ஏனெனில் பழைய காலத்தில் பெண்ணுக்குக் கல்வியறிவு மறுக்கப்பட்டு வந்தது தமிழ்நாட்டில் பெரும்பாலார் பெரும் புலமை வாய்ந்தவராகப் பண்டு திகழ்ந்தனர்; அவர்கள் பாடிய அருந்தமிழ்ச் செய்யுட்கள் தொகை நூல்களிலே இடம் பெற்றுள்ளன. ஆனால் இடைக் காலத்தில் பெண்கல்வி முற்றும் தடைப்பட்டும் ஆண்கல்வி முக்கியப்படுத்தப்பட்டும் இருந்தது இதனால் 1969 ம் ஆண்டு குளத்தூர் முன்சீப் வேதநாயகம் பிள்ளை என்பவர் பெண்கல்வி பற்றிச் சிந்தித்துச் செயற்படவும் ஆரம்பித்தார். அவர் எழுதிய ''பெண் கல்வி'' என்ற நூலில் பெண்களுக்குப் படிப்பு அவசியமென்பதை விளக்கமாக எடுத்துக் கூறுகிறார்.

கணவனுக்குப் பாதி உடலாயும் துணைவியாயும், வீட்டுத்தலைவியாயும் அவனுடைய பிள்ளைக்குத் தாயாகவும் குலவிளக்காகவும் கணவனுக்குப் பிள்ளைச் செல்வமும், பெயரும், பெருமையும் கொடுப்பளாயும் இம்மைமறுமைக்கும் உதவியாயிருக்கின்ற மனைவி கல்வியறிவுள்ளவளாக இருக்க வேண்டியதும் அவசியம் கூட்டுறவு என்பது பெண்ணைப் பொறுத்தவரையில் மிகவும் முக்கியமான ஒரு அம்சமாக அவள் வாழ்விலமைகின்றது. தன் நாளாந்த வாழ்வில் கூட்டுறவு நிலையில்தான் அவள் வாழ்க்கை நடத்த வேண்டியவளாக இருக்கிறாள். ஒரு பெண்தன் வாழ்வு நிலையை மூன்றாக வகுத்துக்கொள்ளலாம். கல்விகற்கும் பருவம். கணவனோடு கூடிவாழும் பருவம், முதுமைப் பருவம் என்னும் மூன்று பருவங்களிலும் கூட்டுறவு வாழ்வினையே அவள் மேற்கொள்ள வேண்டும். மாதர்க்குரிய நீதி முறைகளை வகுத்த நூல்கள் யாவும் இதனை வலியுறுத்துகின்றன.

கூட்டுறவு என்றால் பலர் ஒன்றி வாழ்தல் அல்லது ஒன்று சேர்தல் எனப்பொருள் படும் ஒத்துழைப்பு ஐக்கியம் என்ற சொற்களும் இதனையே விளக்குகின்றன. பலர் குறித்த பயன் கருதி ஒன்று சேர்ந்து ஒத்துழைத்தல் என்ற அடிப்படையில் கூட்டுறவுக்கும் மகளிர்க்கும் நெருங்கிய ஒற்றுமை உண்டு இன்றும் இது இயக்கமாக இருந்த போதும் பழைய காலத்தில் உணர்வு பூர்வமாக இருந்ததையும் நாமறிய முடிகின்றது. எமது முன்னோர்கள் சேர்ந்து வாழ்வதே சிறந்த வலிமை என்பதை நன்குணர்ந்து செயற்பட்டனர். அந்த ஒற்றுமைச் சிறப்புப் பெண்களையும் பங்கு கொள்ள வைத்திருந்தது இம்முறை மேலை நாட்டிலே நூறு ஆண்டுகளுக்கு முன்னர் தான் ஆரம்பமாகி இருக்கின்றது. நம்மவர் கடைப்பிடித்த அவ்வழியினை மேலை நாட்டவரும் பிற்காலங்களிற் சிந்தித்துச் செயலாற்றினர் சாதி, நிறம், மதம், மொழி முதலாய கட்டுப்பாடுகளைக் கடந்து கூட்டுறவு இயக்கம் சேவை புரிகின்றது.

பெண்களைப் பொறுத்தவரையில் கூட்டுறவுக் கல்வி பல நன்மைகளைப் புரிகின்றது கூட்டுறவு முறைகளைப் பற்றிய புத்தகங்கள் பத்திரிகைகள், சஞ்சிகைகள் முதலியவற்றைப் படிப்பதன் மூலம் மகளிர் நடைமுறை வாழ்க்கையையே சீர் திருத்திக் கொள்ள முடியும் கூட்டுறவு மாநாடுகளும் ஐக்கிய கல்லூரிகளும் இத்தொண்டை ஆற்றி வருகின்றன.

கூட்டுறவு இயக்கம் பல ஒன்று சேர்ந்து தமது பொருளாதாரத்தையும் அந்தஸ்தையும் உயர்வடையச் செய்யும் ஒரு மார்க்கமாக இருக்கிறது இந்த மார்க்கம் பெண்கள் வாழ்க்கையிலும் பெரும் பங்கு கொள்ளக் கூடியது. கல்வியறிவில்லாத பெண்கள் கூடத் தமது நளாந்தப் பொருளாதாரச் செலவு பற்றிய விபரங்களைக் கூட்டுறவுப் பண்டகசாலைகளிலே பெற்றுக் கொள்கிறார்கள். விசேடமாக வறுமையிலே உழலும் பெண்கள் திட்டமிட்ட ஒருநாட் செலவைச் சமாளிப்பதற்குக் கூட்டுறவு இயக்கம் நல்லுதவி புரிகின்றது. கூட்டுறவுப் பண்டகசாலைகள் அங்கத்தவர்களுக்கு நல்ல உதவிகளைச் செய்கின்றன. சரியான அளவும் நிறையும் கொண்ட பொருட்களைக் குடும்பம் நடத்தும் பாமரப் பெண்களும் பெற்றுக் கொள்ள முடிகின்றது. பண்டைய வியாபார முறையைச் கூட்டுறவுப் பண்டகசாலைகள் பின்பற்றுகின்றன பட்டினப்பாலை என்னும் சங்க நூலிலே

……… நசை உழவர்
நெடுநுகத்துப் பகல் போல
நடுவு நின்ற நன்னெஞ்சினோர்
வடு அஞ்சி வாய் பொழித்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமவும் பிறவும் ஒப்பநாடி,
கொள்வதும் மிகை கொளாது
கொடுப்பதும் குறை கொடாது
பல் பண்டம் பகர்ந்து வீசும்
தொல் தொண்டித்துவன்றிருக்கை''

எனவரும் கருத்துக்களையே இன்று கூட்டுறவுப் பண்டகசாலைகளில் கையாளப்படும் சிறப்புக்குரியதாகும்.

கூட்டுறவு விளைபொருட் சங்கங்களும் பலதிறப்பட்ட கூட்டுறவுச் சங்கங்களும் பலதிறப்பட்ட கூட்டுறவு நாணயச் சங்கங்களும் பெண்களின் வாழ்வில் நெருங்கிய தொடர்பு கொண்டவை உதாரணமாகக் கூட்டுறவு மாதர் சங்கங்களில் நடைபெறும் நிகழ்ச்சிகள் பெண்களை முன்னேற்றப் பாதையில் வழி நடத்துகின்றன அளவெட்டியில் ஐக்கிய மாதர் சிக்கனச் சங்கம் என ஒரு சங்கம் 6-3-41 இல் பதிவு செய்யப்பட்டது. அதில் 16 அங்கத்தவர்களே இருந்தனர். தாங்கள் செய்கின்ற தையல்வேலை, றேந்தை பின்னுதல், பன்னவேலை, கிடுகுவேலை, கோழி, மாடு, ஆடு, வளர்த்தல் போன்ற சிறு தொழில்கள் மூலம் பெறுகின்ற ஊதியத்தில் ஒரு பங்கினைச் சேமிக்கின்றனர் இச்சேமிப்புப் பழக்கம் வீண் செலவைக் குறைக்க உதவுகின்றது பிற்காலப் பொருளாதார வளர்ச்சிக்கும் வழி நடத்துகின்றது பெண்கள் சிக்கன வாழ்வை மேற்கொள்ள வேண்டியது அவசியம் என்பதை வள்ளுவர் அழகாக விளக்கியுள்ளார். ''மனைத்தக்க மாண்புடையாளாகி வளத்தக்காள் வாழ்க்கைத் துணை'' என அவர் கூறும் பொருளாதார அறிவுடன் பெண்கள் திகழ்வதற்கு கூட்டுறவு இயக்கத்தின் உதவி மிகவும் அவசியம்.

பெண்களைப் பொறுத்தவரையில் கூட்டுறவு ஒரு திட்டமாக மட்டுமன்றி வாழ்க்கை முறையாகவும் அமைய வேண்டும். தன் வீட்டையும் அவள் நன்மை பெறச் செய்வதற்கு இவ்வியக்கம் நன்குதவும் இன்றும் பெண்கள் சமூகத்திலே அவர்களது வாழ்க்கையை பாரதூரமாகப் பாதிக்கின்ற திருமணப் பிரச்சினைகளையும் இம்முறை தீர்த்து வைக்கக்கூடியது சீதனம் சேர்ப்பதன்றி சீதனம் கொடுப்பதற்கும் இன்று பெண்கள் தயாராக இருக்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது அவர்கள் வாழ்வில் நம்பிக்கையை ஏற்படுத்த கூட்டுறவுத் தொழிற்சாலைகள் பெருமுதவி புரிகின்றன இதனால் மகளிருக்கு நடைமுறை வாழ்க்கையாக இக்கூட்டுறவுத் திட்டம் அமைந்து விட்டதெனலாம்

# உலகம் சுற்றிய பிள்ளையார்

## மிகப் பழைய கணேசர் கற்சிலை இலங்கையிலா?

பேராசிரியர் கா. இந்திரபாலா
வரலாற்றுத்துறைத் தலைவர்,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

இன்று ஆசியாவில் இஸ்லாமியர் வாழும் அராபியப் பாரசீக (ஈரானிய) நாடுகள் தவிர்ந்த ஏனைய நாடுகளிலெல்லாம் கணேசர் சிலைகளும் ஓவியங்களும் காணப்படுகின்றன; ஏதோ ஒரு காலத்தில் அங்கெல்லாம் கணேச வழிபாடு அல்லது கணேச வழிபாட்டுடன் தொடர்புடைய செல்வாக்கு இருந்தமைக்கு இவை சான்றுகளாக அமைகின்றன அண்மையில் ஜப்பானுக்குச் சென்றிருந்தபோது, காமக்கூரா நகரத்தில் ஒரு கடையின் முகப்பிலே நீண்ட பதாகைபோன்ற துணியில், நடுவே புத்தர் படமும், வலதுபுறத்தில் வீணை ஏந்திய கணேசர் படமும் இருப்பதைக்கண்டு ஆச்சரியமடைந்தேன ஜப்பானியர் தம் பழைய பௌத்த ஏடுகளில் விநாயகர் குறிப்பிடப்பட்டிருப்பதோடு, விநாயகருடைய படங்களும் பழைய ஜப்பானியத் தலங்களிலே பேணப்பட்டுள்ளன. இந்துனீசியாவிலே சென்ற இடமெல்லாம் பாரிய கணேசர் சிலைகளைக் காணலாம். சீனு, ஆப்கானிஸ்தான் போன்ற நாடுகளிலே இந்தியாவிற்கூடக் கிடைக்காத பழைய கணேசர் சிலைகள் கிடைத்துள்ளன,

இந்துனீசியாவிலும் இற்றைக்கு ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பே இந்துமதம் பரவியபோது கணேச வழிபாடும் பரவலாக இடம்பெற்றது. அந்த நாட்டில் சிறப்பாக ஆற்றங்கரையோரங்களில் கணேச விக்கிரகங்கள் வைக்கப்பட்டு வழிபடப்பட்டன ஆபத்துக்களை நீக்கும் தெய்வம் என்ற முறையில் இந்துனீசியர் மத்தியில கணேசத் தெய்வத்துக்கு முக்கிய இடம் அளிக்கப்பட்டது எனத் தெரிகின்றது. பின்னர் பௌத்தம் பரவிய காலத்திலும் கணேச வழிபாடு, இலங்கையிற் போன்று, தொடர்ந்து முக்கியத்துவம் பெற்றிருக்கலாம். இன்று இந்துனீசியாவின் தலைநகராகிய ஜகார்த்தாவிலுள்ள பெரிய நூதனசாலையில் (அரும் பொருளகத்தில்) நாட்டின் பல பாகங்களிலிருந்தும் கொண்டுவரப்பட்டுள்ள கணேச விக்கிரகங்கள் பலவற்றைக் காணலாம். உலகில் வேறெந்த நூதனசாலையிலாவது இவ்வளவு பெருந்தொகையான கணேச விக்கிரகங்கள் சேர்த்து வைக்கப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பட்டுள்ளன என்று சொல்ல முடியாது. அந்தளவுக்கு நாட்டின் பல பாகங்களிலே பழைய கணேச விக்கிரகங்கள் கண்டெடுக்கப்பட்டுள்ளன. இவற்றுட் பல விக்கிரகங்கள் மண்டையோடுகள்மீது, அல்லது மண்டையோடுகளை மாலையாக அணிந்து இருப்பது ஒரு சிறப்பியல்பாக அமைகின்றது. இஸ்லாமிய நாடாக இருந்தாலும் இந்துனீசியா இவற்றுக்குப்பெரு முக்கியத்துவம் கொடுத்து நூதனசாலையில் அழகாகக் காட்சிக்கு வைத்திருப்பது ஒரு பாராட்டத்தக்க விஷயமாகும். இவவாறு பெருந்தொகையான கணேச விக்கிரகங்கள் இந்துனீசியாவிலே கிடைத்திருப்பினும், கி. பி. ஐந்தாம் நூற்றுண்டுக்கு முற்பட்ட விக்கிரகங்கள் அங்கு கிடைக்கவில்லை.

இந்துமத வரலாற்றை விஞ்ஞான ரீதியாகத் தொல்பொருளாதாரங்களையும் பயன்படுத்தி ஆராய்ந்து பார்ப்போமாயின் கணேச வழிபாடு ஒரு பிற்பட்ட காலத்து வழிபாடாகத் தோன்றுவதைக் காணலாம் கி.பி. ஐந்தாம் நூற்றுண்டுக்கு முன்பாக யானை முகத்தையுடைய தெய்வம் ஒன்றின் சிலையோ அல்லது அத்தகைய தெய்வத்தின் வழிபாடுபற்றிய குறிப்புகளைக் கொண்ட நூல்களோ கிடைக்கவில்லை எனலாம். தமிழ்நாட்டிலேகூடப் பிள்ளையார் வழிபாடு பல்லவர் காலத்திலேதான், கி.பி ஆறும் நூற்றுண்டளவில் ஆரம்பித்தது என்று கூறுவார்கள். இதனுல் கணேசர் வழிபாடு எப்படி ஆரம்பித்து, கி பி ஐந்தாம் நூற்றுண்டளவில் இந்தியாவில் எப்படிப் பரவியது என்பதைத் தெளிவாக விளக்க முடியாமல் உள்ளது.

இந்தியாவில் ஐந்தாம் நூற்றுண்டுக்கு முற்பட்ட கணேசர் சிலைகள் கிடைக்காவிட்டாலும், இந்தியாவுக்கு வெளியே அப்படியான தெய்வத்தின் உருவங்கள் கிடைத்துள்ளமை கணேச வழிபாட்டின் வரலாற்றை மேலும் ஆர்வத்துடன் ஆராயவேண்டிய ஒன்ருக மாற்றி நிற்கின்றது. சில ஆண்டுகளுக்குமுன் அப்கானிஸ்தானில் இரண்டு கணேச விக்கிரகங்கள் கண்டுபிடிக்கப்பட்டன. இவையிரண்டும் கி. பி. ஐந்தாம் நூற்றுண்டுக்கு முற்பட்டவை அவற்றுள் ஒன்று காபுல் நகருக்குப் பத்து மைல் வடக்கே கண்டுபிடிக்கப்பட்ட ஒரு பளிங்குக் கல் விக்கிரகம். அது கி பி. நாலாம் நூற்றுண்டைச் சேர்ந்தது என மதிப்பிடப்பட்டுள்ளது இவ்வாறே சீனுவிலும் கி பி. 531-ஆம் ஆண்டைச் சேர்ந்த ஒரு கணேச விக்கிரகம் கிடைத்துள்ளது.

ஆனுல் இவற்றைக் காட்டிலும் பழைமையான கணேசர் உருவம் ஒன்று இலங்கையில் உள்ளது என்று கூறினுல் பலர் ஆச்சரியப்படலாம். இலங்கையிலே மிகப் பழைய கற்சிற்பங்கள் மிஹிந்தலையிலே கிடைத்துள்ளன. இவை கற்றூண்களிலே செதுக்குச் சிற்பங்களாக அமைந்துள்ளன. பலவகைத் தாவர அலங்கார வேலைப்பாடுகளுடன் யக்ஷ கணங்கள் என்று கூறக்கூடிய குறுகிய, பெருவயிறுடைய உருவங்களும் இத்தூண்களிலே செதுக்கப்பட்டுள்ளன இவை ஆந்திரத்துக் கலைமரபில் அமைந்திருப்பதும் குறிப்பிடத்தக்கது இத்தகைய கணங்கள் மத்தியில் யானை முகத்தையுடைய பிள்ளையார் உருவமும் காணப்படுகின்றது. மிஹிந்தலையிலுள்ள இச்சிற்பங்கள் கி பி, இரண்டாம், மூன்றும் நூற்றுண்டுகளைச் சேர்ந்தவை என்று கருதப்படுகின்றன. ஆந்திரச் செல்வாக்கின் விளைவாக அப்பொழுதுதான் கல்லிலே சிற்பங்களைச் செதுக்கும் மரபு இலங்கையிலே வளரத் தொடங்கியது

இலங்கையில் கிடைத்துள்ள இந்தக் கணேசர் உருவம் இந்தியாவில் மட்டுமல்ல, சீனு, அப்கானிஸ்தான் ஆகிய நாடுகளிலே கிடைத்த கணேச விக்கிரகங்களைக் காட்டிலும் காலத்தால் முற்பட்டது அதனுல் இலங்கையிலேதான் கணேசருடைய மிகப்பழைய கற்சிற்பம் காணப்படுகின்றது என்று கூறக்கூடியதாயுள்ளது. கணேச வழிபாடு ஆரியருக்கு முற்பட்ட ஒரு வழிபாட்டின் வழியாக வந்திருக்க வேண்டும். இலங்கையில் பௌத்தம் பரவிய காலத்தில் நிலவிய வழிபாட்டு முறைகளுள் ஒன்றுகக் கணேச வழிபாடும் இருந்திருக்கலாம எனத் தோன்றுகிறது இதனுலோ என்னவோ, இன்றும் சிங்களப் பிரதேசங்களிலெல்லாம் கிராமிய மட்டத்தில்; பௌத்த விகாரைகளுடனும் வேருகவும் கணேச விக்கிரகங்களும் வழிபாட்டுக்காக வைக்கப்பட்டிருப்பதையும் சிங்கள மக்கள் இவ்வழிபாட்டில் மிகுந்த ஈடுபாட்டைக் கொண்டிருப்பதையும் காணமுடிகின்றது.

இலங்கையின் சிற்பக்கலை வரலாறு தொடங்குகின்ற காலமாகிய கி. பி இரண்டாம் நூற்றுண்டளவிலேயே கணேசர் உருவம் இங்கு கிடைப்பதைத் தொடர்ந்து, தற்காலம் வரை பௌத்த வழிபாட்டுத் தலங்களிலே கணேச விக்கிரகங்களுக்கு இடமளிக்கப்பட்டு வந்துள்ளது. மிக அண்மைக்காலத்திலே திருத்திக் கட்டப்பட்ட பிரசித்திபெற்ற பௌத்த தலமாகிய களனி ரஜ மகாவிகாரையில் அழகிய கணேசர் விக்கிரகம் ஒன்று எலி வாகனத்தின் மீது அமர்ந்திருக்கும் நிலையிலே காணப்படுகின்றது. பழைய சிங்களச் சிற்ப அலங்கார மரவுருபுகளுக்கேற்ப இவ்விக்கிரகத்தின் கீழ் அன்னப் பட்சிகளும் யக்ஷ கணங்களும் வரிசையாகச் செதுக்கப்பட்டுள்ளன.

இவ்வாறு பௌத்த வழிபாட்டமைப்பில் இலங்கையிலே கணேசர் இடம்பெற்று வந்ததுபோல, இந்துக்களுக்குரிய வழிபாட்டுத் தலங்களிலும் கணேச விக்கிரகங்கள் இடம்பெற்று வந்துள்ளன என்பது கூருமலே அமையும். சில ஆண்டுகளுக்கு முன்னர் பொலன்னறுவையிலே கண்டெடுக்கப்பட்ட வெண்கலச் சிற்பங்கள்மத்தியில் ஒரு பெரிய கணேசர் விக்கிரகமும் கிடைத்தது. இது சோழராட்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிக் கா மாகிய பதினொராம் நூற்றாண்டைச் சேர்ந்தது பொலன்னறுவையில் அக்காலத்திலிருந்த சைவ ஆலயம் ஒன்றில் வழிபாட்டுக்காக வைக்கப்பட்டிருந்து பின்னர் ஏதோ ஆபத்து ஏற்பட்ட போது கோயிலில் நிலத்தின் கீழ்ப் புதைக்கப்பட்டது. அது இப்பொழுது அநுராதபுர நூதனசாலையுல் காட்சிக்காக வைக்கப்பட்டுள்ளது இவ்வாறாக, இலங்கையில் கணேச விக்கிரகத்துக்கு ஏறக்குறைய ஆயிரத்தெண்ணூறு ஆண்டு கால வரலாறு உண்டு என்று கூறலாம்

எனினும், இலங்கையிலே கிடைத்துள்ள கணேச சிற்பத்தை விடப் பழைய கணேச உருவம் ஒன்று கிறிஸ்துவுக்கு முற்பட்ட கால நாணயம் ஒன்றிலே காணப்படுகின்றது என்பதையும் இங்கு குறிப்பிட வேண்டும். பாகிஸ்தான், அப்கானிஸ்தான் நாடுகள் அமைந்துள்ள பிரதேசத்தில் இந்து - கிரேக்கர் என்ற கிரேக்கர் வழி வந்த வம்சத்தவர் கிறிஸ்துவுக்கு முற்பட்ட நூற்றாண்டுகளிலே ஆட்சி நடத்தினர் அவர்களுள் ஒருவனாகிய ஹெர்மாயுஸ் என்ற மன்னன் கி. மு. முதலாம் நூற்றாண்டில் ஆட்சி நடத்தினான் அவன் வெளியிட்ட நாணயம் ஒன்றில் ஒருபுறம் அவனுடைய உருவமும் மறுபுறம் ஒரு கணேசர் உருவமும் காணப்படுகின்றன. இதுவே இதுவரை கிடைத்த மிகப்பழைய கணேசர் உருவம் எனக் கொள்ளவேண்டியுள்ளது இலங்கையில் இருப்பது மிகப்பழைய கணேசர் கற்சிலை அல்லது கற்சிற்பம் எனலாம்

---

''பேழை வயிறும் பெரும்பாரக் கோடும்
வேழ முகமும் விளங்கு சிந்தூரமும்
அஞ்சு கரமும் அங்குச பாசமும்
நெஞ்சிற் குடிகொண்ட நீலமேனியும்
நான்ற வாயும் நாலிரு புயமும்
மூன்றும் கண்ணும் மும்மதச் சுவடும்
இரண்டு செவியும் இலங்கு பொன்முடியும்
திரண்டமுப்புரி நூல் திகழ் ஒளிமார்பும்
சொற்பதம் கடந்த துரிய மெய்ஞ்ஞான
அற்புதம் நின்ற கற்பககளிறு'


திருமண வைபவமா !
புதுமனைப் புகுவிழாவா !!

மற்றும் சகல வைபவங்களுக்கும்

நல்ல ரக அரிசி வகைகளுக்கு
நாடுங்கள்

# இராஜா அரிசி ஆலை

கொக்குவில்

நல்லூர் பலநோக்குக் கூட்டுறவுச் சங்க
கூட்டுறவு தினவிழா சிறப்பு மலர்
சிறப்புற வாழ்த்துகிறோம்

தலைநகரில்,

உள்ளூர் விளைபொருட்கள் சந்தைப்படுத்துபவர்கள்

# வெலிகம ஸ்ரோர்ஸ்

139. 4ம் குறுக்குத்தெரு,
கொழும்பு.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Subhas Modern Cafe

**JAFFNA**

**For Quality:**

BURIYANI
NOODLES
SWEETS

**Phone: 578**



*Space Donated by*

# People's Trades & Supplies,

112, 4th Cross, Street,
**COLOMBO – 11**



**நல்லூர் பல நோக்குக் கூட்டுறவுச் சங்க விழா**
**மலர் மலர்ந்து மணம் பரப்ப**
**எனது இதயபூர்வமான வாழ்த்துக்கள்.**

# பிரபல கட்டிட ஒப்பந்தகாரர்

## திரு. க. பேரம்பலம் ஜே. பி.

*68/2, 5வது லேன்,*
*பிறவுண் வீதி,*
**யாழ்ப்பாணம்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*With the Best Compliments of*

**Ceyma Silk Industries Limited**

Manufacturers of

**Pure Silk, Rayon,**

**Synthetic & Cotton Textiles**

*Factory:*
Thirunelvely,
JAFFNA

*Office:*
154, 2/4, Wolfendhal Street,
COLOMBO-13

Tele Grams 'Ceymasilk'
Tele Phone 7170

Telephone 35910




# இலங்கையில் கூட்டுறவு இயக்கம்—ஒரு கண்ணோட்டம்

**எஸ். சிவயோகநாதன்**
கட்டிட மேற்பார்வையாளர்
நல்லூர் ப. நோ. கூ. சங்கம்.

"கூட்டுறவு" பல்வேறு நாடுகளிலும் பல்வேறு கால கட்டங்களில் அந்நாட்டு மக்களின் பொதுத்தேவைகளை மையமாகக் கொண்டு அவர்களின் அடிப்படை உந்தல்களினால் உருவானதொரு இயக்கமாகும். ஆனால் இலங்கையைப் பொறுத்தளவில், பங்கீட்டு முறையில் உணவுப் பொருட்களை விநியோகம் செய்வதற்காக அரசாங்கங்களின் சட்ட மூலங்கள் மூலம் இவ்வியக்கம் அரசாங்கத்தினால் வளர்க்கப்படும் இயக்கமாக இன்றுவரை இயங்கி வருகிறது அது பற்றிய கட்டளைச் சட்டங்களும் அவை உருவாக்கப்பட்ட ஆண்டுகளும்.

- ※ **1909 ல்** விவசாயிகளுக்குக் கடன் வழங்கும் ஐக்கிய நாணய சங்கங்கள் ஆரம்பிக்கப்பட்டன.
- ※ **1911 ல்** ஐக்கிய நாணய சங்கங்கள் பதிவு செய்ய கூட்டுறவுக் கட்டளைச் சட்டம் இயற்நப்பட்டது. 19 2ல் வெல்லபடபத்து என்னும் கிராமத்தில் முதன் முதலாக மேற்படி சங்கம் பதிவு செய்யப்பட்டது.
- ※ **1916 ல்** உள்ளூர் கடனுக்கும் அபிவிருத்தி நிதியும் உருவாக்க 220ம் இலக்க கூட்டுறவுக் கட்டளைச் சட்டம் உருவாக்கப்பட்டது.
- ※ **1921 ல்** ஐக்கிய நாணய சங்கங்கள் மட்டுமின்றி ஏனைய வகைச் சங்கங்கள் பதிவு செய்யப்படும் வகையில் 1911ம் ஆண்டுச் சட்டம் திருத்தியமைக்கப்பட்டது.
- ※ **1924 ல்** முதன் முதல் கொழும்பில் கூட்டுறவு மாகாண சமாசம் பதிவு செய்யப்பட்டது.
- ※ **1927 ல்** பசறைத் தோட்டத்தில் முதலாவது கூட்டுறவுப் பண்டகசாலைச் சங்கம் பதிவு ரொய்யப்பட்டது.
- ※ **1929 ல்** யாழ்ப்பாணத்தில் முதன் முதல் கூட்டுறவு மாகாண வங்கி பதிவு செய்யப்பட்டது.
- ※ **1931 ல்** யாழ்ப்பாணத்தில், யாழ்ப்பாணம் மலையாளர் புகையிலை விற்பனவுச் சங்கம் பதிவு செய்யப்பட்டது.
- ※ **1936 ல்** கூட்டுறவுச் சங்கங்களின் கட்டளைச் சட்டங்களை ஒன்றிணைத்து திருத்தம் செய்யப்பட்டது. மூளாயில் கூட்டுறவு வைத்தியசாலை பதிவு ரொய்யப்பட்டது.
- ※ **1937 ல்** வடபகுதி ஐக்கிய மேற்பார்வைச் சங்கம் பதிவு செய்யப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

* **1938 ல்** கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளராக முதன் முதல் இலங்கையரான திரு. ஜே டி. சொய்ஸ நியமனம் பெற்றமை.
* **1942 ல்** இரண்டாவது உலக மகாயுத்தம் தொடர்பாக பாவனைப் பொருட்கள் மக்களுக்கு இலகுவாகக் கிடைக்கக் கூடிய வகையில் பல கூட்டுறவுப் பண்டகசாலைகள் பதிவு செய்யப்பட்டன தென்னை உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கம், வடபகுதி விவசாய விளைபொருள் உற்பத்தி விற்பனையாளர் சமாசம் ஆகியவை பதிவு செய்யப்பட்டன.
* **1943 ல்** பொல்கொல்லையில் கூட்டுறவுக் கல்லூரி ஆரம்பிக்கப்பட்டது. கூட்டுறவு இலாகாவினால் கூட்டுறவு மொத்த விற்பனவு நிறுவனம் ஆரம்பிக்கப்பட்டது. கூட்டுறவுப் பண்டகசாலைச் சமாசங்கள் பதிவு செய்யப்பட்டன.
* **1945 ல்** கூட்டுறவு அபிவிருத்தித் திணைக்களம் நிறுவப்பட்டது
* **1947 ல்** விவசாய விளைபொருள் உற்பத்தி விற்பனைச் சங்கங்கள் பதிவு செய்யப்பட்டன.
* **1949 ல்** கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளர் திணைக்களமும், சங்கங்களின் பதிவாளர் திணைக்களமும் ஒன்று சேர்க்கப்பட்டன. கூட்டுறவு மொத்த விற்பனை நிறுவனம், கூட்டுத்தாபன அமைப்புக்கு மாற்றப்பட்டது கூட்டுறவு சமஷ்டி வங்கி பதிவு செய்யப்பட்டது.
* **1952 ல்** இலங்கை மீன் விற்பனைச் சங்கம் பதிவு செய்யப்பட்டது யாழ்ப்பாணத்தில் கூட்டுறவுக் கல்லூரி ஆரம்பிக்கப்பட்டது.
* **1955 ல்** கூட்டுறவுச் சங்கங்களின் சம்மேளனம் உருவாக்கப்பட்டுப் பதிவு செய்யப்பட்டன.
* **1957 ல்** பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் பதிவு செய்யப்பட்டன.
* **1961 ல்** மக்கள் வங்கி நிறுவப்பட்டது.
* **1962 ல்** இலங்கை விவசாய உற்பத்தியாளர் சங்கம் பதிவு செய்யப்பட்டன.
* **1964 ல்** இலங்கை கூட்டுறவுக் கைத்தொழில் சங்கம் பதிவு செய்யப்பட்டது.
* **1966 ல்** நுகர்வோர் கூட்டுறவுச் சங்கம் பதிவு செய்யப்பட்டது.
* **1968 ல்** லெயிட்லோ தலைமையில் ஆணைக்குழு நியமனம்—கூட்டுறவு இயக்கம் சம்பந்தமாக.
* **1970 ல்** லெயிட்லோ ஆணைக்குழு அறிக்கையின் பிரகாரம் சங்கங்களின் புனரமைப்பு வேலைகள் ஆரம்பிக்கப்பட்டன.
* **1972 ல்** ஸ்ரீலங்கா தேசிய கூட்டுறவுச் சபை ஆரம்பிக்கப்பட்டது.
* **1973 ல்** கூட்டுறவு முகாமைச் சேவைகள் நிலையம் நிறுவப்பட்டது
* **1978 ல்** "தேவநாயகம் குழு" கூட்டுறவு இயக்கம் சம்பந்தமாக ஆராய நியமனம் செய்யப்பட்டது. கூட்டுறவு விசேட ஏற்பாடுகள் 1 ம் இலக்க சட்டம் நிறைவேற்றப்பட்டது.
* **1979 ல்** கூப்பன் புத்தகம் ஒழிக்கப்பட்டு உணவு முத்திரைத் திட்டம் அமுல் செய்யப்பட்டது.


நல்லூர் பலநோக்குக் கூட்டுறவுச் சங்க விழா சிறப்புற வாழ்த்துகிறோம்

"கீதா"

"GEETHA"

உங்களுக்குத் தேவையான சகலவித

இறக்குமதி செய்யப்பட்ட புடவைகள்

மற்றும் அழகு சாதனங்களும்

மொத்தமாகவும் சில்லறையாகவும்

பெற்றுக்கொள்ளலாம்

"GEETHA" 103, Maliban St. COLOMBO - 11



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நியூரோன் எலக்றிக்கல்ஸ்

**மின்சார உபகரணங்கள் இறக்குமதியாளரும்,**

**மொத்த சில்லறை விற்பனையாளரும்.**

**மற்றும்**

- ***சென்றிக் மின்சார நீர்இறைக்கும் இயந்திரங்கள்***
- ***சென்றிக் ரூபின் என்ஜினுடன் இணைக்கப்பட்ட மண்ணெண்ணை நீர் இறைக்கும் இயந்திரங்கள்***
- ***ஜெம் மின்சார மோட்டார்கள்***
- ***எவரெடி பற்றறிகள்***
- ***எஸ்–லோன் பைப்புகள், உபகரணங்கள்***
- ***சி. பி. ஈ. மின்சார பல்புகள்***

**வடமாகாண விநியோகஸ்தர்களாய் இருப்பவர்கள்**

**இன்றே விஜயம் செய்யுங்கள்**

# NEWTONE ELECTRICALS

**141, 143, Stanley Road,**
**JAFFNA.**

*Telephone : 7016*

**Ride to success on**

# "RONSON"

# genuine japanese bicycle

***Sole Importers:***

## City Cycle Trading Co.

**3rd Cross Street,**
**Colombo - 11**

***Sole Distributors:***

## E. P. Creasy & Co. Ltd.

**98, Sri Sangaraja Mawatha,**
**Colombo - 10**

*Telephone No : 32715*


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தற்பொழுது நாடெங்கும்
அமோகமாக விற்பனையாகின்றது.

இங்கிலாந்து ஏற்றுமதி பரிசுபெற்ற
உலகப் பிரசித்தி பெற்ற
ஒறிஜினல் இங்கிலிஷ் 12/2, வில்லியர்ஸ்
என்ஜின் பூட்டப்பட்ட 2" யூனியர்
மாக் 25 வில்லியர் என்ஜின்
பூட்டப்பட்ட 2" சீனியர்

சிக்மா பம்ப்ஸ்

பிரபல வர்த்தகர்களிடமும்
பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்களிடமும்
கிடைக்கும்.

CEYGMA PUMPS

Juniors with world famous English 12/2 Villiers Engines. Seniors with Indian Mark 25 Villiers Engines.

அத்துடன் இலங்கையின் எப்பகுதியிலும் விரும்பிக் கேட்கும் "சிக்மா" மின்சாரப் பம்புகள் தற்சமயம் கையிருப்பில் உண்டு
2" x $1\frac{1}{2}$" 1 எச். பி (H. P.) அமெரிக்க மோட்டர் பம்ப்
$1\frac{1}{2}$" x $1\frac{1}{4}$" $\frac{1}{2}$ எச் பி (H. P.) குரோம்ரன்
வீட்டுப் பாவனை மோட்டர் பம்பு.
2" 2" 3 எச். பி. (P H) மூன்று பேஸ
3 Phase 400 V) மோட்டர் பம்பு

குழாய்க் கிணறுகளுக்குரிய பம்புகள் பல அளவுகளிலும்
மற்றும் 3", 4" 6" டீசல் அல்லது மின்சாரப் பம்புகள்
மேலும் விபரங்கட்கு;
யாழ்ப்பாணம் தொழிற்சாலை

யூனைட்டட் அக்ரோ என்ஜினியரிங்

நாவற்குழி

United Agro Engineering - Navatkuli

ஆபிஸ் 50, 1ம் குறுக்குத் தெரு, யாழ்ப்பாணம்
தொலைபேசி இல: 7050

கொழும்பு கொன்ராக்ஸ் அன் சப்ளைஸ் (Mfg) லிமிட்டெட்)
Contracts & Supplies (Mfg) Ltd Colombo.
199, வாக்சால் வீதி, கொழும்பு - 2
தொலைபேசி இல: 33921 — 24312

# கூட்டுறவுச் சிந்தனைகள்

தொகுப்பு: செல்வி. லோ. கந்தையா
கடன் முகாமையாளர் (நல்லூர் ப. நோ. கூ. சங்கம்)

கூட்டுறவின் தீமையை எதிர்த்துப் போராடுகின்றவர்கள் தம்மைக் கட்டுபடுத்தித் தூய்மைப்படுத்திக் கொள்ளா விட்டால், அந்தப் போராட்டத்தில் அவர்கள் அடையும் வெற்றி பயனற்றதாகி விடும்

* * *

கூட்டுறவு உணர்வானது ஒவ்வொருவரின் வாழ்க்கை இலட்சியத்துக்காக விளங்கவேண்டுமேயன்றி வெறும் ஆராய்ச்சிக்காக மட்டும் இருத்தல் கூடாது.

* * *

முழு மனதுடன் ஈடுபட்டு கூட்டுறவில் நேர்மை எண்ணத்துடன் செய்யும் எந்த முயற்சியும் வீண் போகாது

* * *

பதற்றமில்லாமல் சாந்தமான சூழ்நிலையில் பணிபுரியும் கூட்டுறவாளர்களால் தான் எடுத்த காரியத்தை வெற்றியுடன் செய்து முடிக்க முடியும்.

* * *

வெறும் பேச்சை விட செயல்தான் கூட்டுறவில் சிறந்த பயனை அளிக்கும்

* * *

கூட்டுறவில் எவரும் ஆத்திரமோ பதற்றமோ அடைதல் கூடாது. விவேக சிந்தனை கொண்டு செயல் புரிதல் வேண்டும் அதுவே அவரின் வெற்றிக்கு வழியாகும்.

* * *

கூட்டுறவில் ஒருவர் அடையும் பெருமையானது அவருக்குப் பிறர் அளிக்கும் ஆதரவைப் பொறுத்துத்தான் அமைந்துள்ளது என்பதை இயக்கத்தில் ஈடுபட்டுள்ள ஒவ்வொருவரும் நினைவு கொள்ள வேண்டும்.

* * *

உணர்ச்சிகளைக் கட்டுப்படுத்தி உறுதியுடன் கூட்டுறவில் செயலாற்ற உள்ளத்தூய்மை யெனும் உயரிய பண்பாட்டை ஒவ்வொருவரும் உடைத்தாய் இருத்தல் வேண்டும்.

* * *

கூட்டுறவில் ஆத்திரமும் அவசரமும் விடயத்தை சிக்கலாக்குமே தவிர சீரடையச் செய்யாது.

* * *

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நல்லூர் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம்

# கூட்டுறவாளர் தின விழா போட்டி முடிவுகள் 1980

## பேச்சுப்போட்டி

| | | | |
|---|---|---|---|
| மேற்பிரிவு | 1 | செல்வி ம. நிர்மலாதேவி, | யாழ். முத்துத்தம்பி வித்தியாலயம், திருநெல்வேலி |
| | 2 | ,, க. நவநீதம், | யாழ். செங்குந்தா இந். கல்லூரி |
| | 3 | ,, கு. இராசாத்தியம்மா, | யாழ். முத்துத்தம்பி வித்தியாலயம். திருநெல்வேலி |
| மத்தியபிரிவு | 1 | ,, க. விஜயலக்சுமி | யாழ். முத்துத்தம்பி வித்தியாலயம், திருநெல்வேலி |
| | 2 | ,, அ சரஸ்வதி | ,, ,, |
| | 3 | செல்வன் ச. சுடலைமுத்து | ,, ,, |
| கீழ்ப்பிரிவு | 1 | செல்வி வி. மகாலட்சுமி | ,, ,, |
| | 2 | ,, பா. குமுதினி | ,, ,, |
| | 3 | ,, சி. சந்திரவதனி | ,, ,, |
| அதிகீழ்ப்பிரிவு | 1 | செல்வி செ. குமுதம், | யாழ் திருநெல்வேலி இ.த.க பாடசாலை |
| | 2 | ,, நே சுஜந்தா, | யாழ். திருநெல்வேலி றோ.க. த. க. பாடசாலை |
| | 3 | ,, கு. கோணேஸ்வரி, | ,, ,, |

## கட்டுரைப்போட்டி -

| | | | |
|---|---|---|---|
| மேற்பிரிவு | 1 | செல்வன் ச. உருத்திரன்; | யாழ் கொக்குவில் இந்துக் கல்லூரி |
| | 2 | ,, பூ. கணேஸ்வரன் | ,, ,, |
| | 3 | ,, நா. கண்ணன் | ,, ,, |
| மத்தியபிரிவு | 1 | செல்வி அ. சரஸ்வதி. | யாழ். முத்துத்தம்பி வித்தியாலயம், திருநெல்வேலி |
| | 2 | ,, க. லோகநாயகி, | ,, ,, |
| | 3 | ,, க. விஜயலட்சுமி, | ,, ,, |


பாவனையாளர்களுக்கு ஓர் நற்செய்தி

நுரை வளர்ச்சிக்கு
பளிச்சிடும் வெண்மைக்கு
சிக்கன சலவைக்கு

எம் டீ சோப்

வாங்கிப் பாவியுங்கள்

கைத்தொழில் பேட்டை, அச்சுவேலி.


சோஷலிச பொருளாதாரத் திட்டத்தை உருவாக்கும் பணியில் கூட்டுறவு இயக்கம் தலை சிறந்த பங்கு வகிக்கின்றது நாட்டிலுள்ள சாதாரண மக்களின் நல்வாழ்வுக்காகப் பணிபுரிவதில் இந்த இயக்கத்திலுள்ள அனைவரும் சிறந்த நிருவாகத்திலும், தன்னலமற்ற சேவையிலும் முன்மாதிரியாக விளங்குவார்கள் என நம்புகிறோம்.

—டாக்டர் இராதாகிருஷ்ணன்

---

மனித குலம் தனது வாழ்வுத் தேவைகள் முழுவதையும் நிறைவேற்றக் கூட்டுறவுக் கொள்கைகள் காட்டும் வழியைப் பின்பற்றிப் பயன்பெற முடியும், தொடர்ந்து பின்பற்றுவது தனி மனிதனுக்கும் சமுதாயத்திற்கும் நல்லதைக் கொடுக்கும் இக் கொள்கையின் வழிகாட்டல்கள் சமுதாய ஏற்றத்தாழ்வுகளையும் சமுக அநீதிகளையும் சுரண்டல்களையும் ஒழித்து நீதியும் அறமும் சார்ந்த பொதுநல சமுதாய அமைப்பொன்றை உருவாக்க இக் கொள்கைகள் வழி வகுக்கும்.

—றெபேர்ட் ஓவன்

---

ஒரு சிலரின் பிடிப்பில் கூட்டுறவுத்துறை சிக்கிவிடாத முறையில் ஏழை எளியவர்களுக்குப் பயன்படும் வகையில் சட்டதிட்டம் இருக்க வேண்டும்.

—அறிஞர் அண்ணா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



நல்லை நகர்க் காவலன்

நல்லூர்க் கந்தன்

ஆசியுடன்

எமது சங்க அங்கத்தவர்களுக்கும்

வாடிக்கையாளர்களுக்கும்

பொதுமக்களுக்கும்

எமது வாழ்த்துக்கள்

## நல்லூர் ப. நோ. கூ. சங்கம்

திருநெல்வேலி, தொலைபேசி: 7646
யாழ்ப்பாணம்.

---

கூட்டுறவு என்பது ஒரு முறையான கொள்கையைக் காட்டிலும் மேலானது. அது மனதையும் அறிவையும் கவரும்-ஓர் உணர்வாகும. அது வணிகத்திற்குப் பயன் படுத்தப்படும் கொள்கைகளைக் கொண்டு அமையலாம். தன்னிறைவு, சேவை என்ற தத்துவங்களை வழங்குவது மாகும்.

— சா. எவ். எல். டார்லிங்

---

இம்மலரினுள் உள்ள படைப்புகளில் எவற்றையாயினும் மறுபிரசுரம் செய்ய விரும்புபவர்கள் நல்லூர் பலநோக்குக் கூட்டுறவுச் சங்க நிர்வாகிகளிடம் அனுமதி பெற வேண்டும்,

— ஆசிரியர்

---

நல்லூர் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கவிழா
சிறப்புற எமது வாழ்த்துக்கள்

## ஞானம்ஸ் புகைப்படப் பிடிப்பாளர்

301, மணிக்கூட்டு வீதி,
யாழ்ப்பாணம்

T. P. 7067

---

நல்லூர் பல நோக்குக் கூட்டுறவுச் சங்க
கூட்டுறவாளர் தினவிழா
சிறப்புற வாழ்த்துகிறோம்.

## நோதேர்ண் இன்டஸ்றீஸ்

(ரயர் நிரப்புபவர்கள்)
112, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்
தொலைபேசி: 7158

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கனரக வாகனச் சொந்தக்காரர்களுக்கு
ஓர் நற்செய்தி

உங்கள்
டீசல், பெற்ரோல் வாகனங்களில்
ஏற்படும்
சகலவிதமான
திருத்தவேலைகளுக்கும்,

எம்மை நாடுங்கள்

பராகன் டீசல் என்ஜினியேர்ஸ்
70, அரசடி வீதி,
யாழ்ப்பாணம்

யாழ் நகர் மக்களுக்கு ஓர் நற்செய்தி !!

சகலவிதமான வைபவங்களுக்கும்

குணரத்தினம் ஸ்ரோர்ஸ்

நல்லரக அரிசி வகைகளும், பலசரக்கு வகைகளும்
எம்மிடம் மொத்தமாகவும் சில்லறையாகவும்
பெற்றுக்கொள்ளலாம்

202, 204, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.

தொலைபேசி : 556

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*With Best Compliments of:*

# Glass House

**Importers, Exporters, General Merchants**
**Wholesalers, Retailers & Lorry Transporters.**

**182, K. K. S. Road, Jaffna.**

T'phone: **201.** T'Grams: Glass

நல்லூர் ப. நோ. கூ. சங்கம்

# பொதுச்சபை உறுப்பினர்கள் 1979 / 80

### கல்வியங்காடு கிளை இல. 1

1. செ. சின்னத்துரை
2. த. துரைமணி
3. ந. புவனேந்திரன்
4. கு. தர்மலிங்கம்
5. த. துரைசிங்கம்

### திருநெல்வேலி—கிளை இல. 2 (2/1, 2/2, 2/3. 2/4, 2/5)

6. த, சிவசிதம்பரம்
7. க. பத்மநாதன்
8. க. அன்டுறு
9. வ. முதலிததம்பி
10. செ. சீவரத்தினம்
11. சி. கந்தையா
12. சோ. சிதம்பரநாதன்
13. செ. பூலோகசிங்கம்
14. பொ. உருத்திராபதி

### பொற்பதி—கிளை இல. 3

15. க. வர்ணகுலசிங்கம்
16. பொ. கனகரத்தினம்
17. த, இரத்தினசிங்கம்

### நாகபூஷணி—கிளை இல. 4

18. பொ. பஞ்சலிங்கம்
19. சு. சுந்தரலிங்கம்
20. ப. ஜனார்த்தசிங்
21. இ. லோகேந்திரகுமார்
22. இ. பாலசுந்தரம்
23. க. வைரவநாதன்
24. ம. லம்போதரன்
25. செ. திருநாவுக்கரசு

### கோண்டாவில் ஸ்ரேசன் கிளை இல. 5.

26. இ. பொ. குமாரசாமி
27. அ. இராசையா
28. அ. கனகலிங்கம்
29. அ. இராமச்சந்திரன்
30. வ. தங்கராசா

### குமரகோட்டம் கிளை இல. 5/1

31. த. கனகசபை
32. வீ, பரமேஸ்வரன்

### அன்னுங்கை - கிளை இல. 6

33. க, அருணாசலம்
34. சோ. பத்மநாதன்
35. சு. துரைராசா
36. அ. கமலநாதன்
37. மு. சுந்தரமூர்த்தி
38. பொ. நடராசா
39. க. ந. சிவசுப்பிரமணியம்

### மஞ்சத்தடி—கிளை இல. 7

40. க. வைத்தியலிங்கம்
41. சி. சோதிலிங்கம்
42. மு. கணேசு
43. மு. இராசதுரை

### கோண். மேற்கு கிளை இல. 8

44. கு. செல்வநாயகம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொக்குவில் மத்தி
கிளை இல. 9, 9/2

45 ந. அருணாசலம்
46 ந. ஈஸ்வரராசா
47. த. நாகராசா
48. இ. இராசேந்திரம்

மணியர்காடு கிளை இல. 10

49. அ. கந்தையா
50 தா. அழகையா

வேதக்கோவிலடி கிளை இல. 11

5 . வ சூசைப்பிள்ளை
52. த. அந்தோனிப்பிள்ளை

கொக்குவில் அரசடி
கிளை இ- 12

53. சோ. தவலிங்கம்

கொக்குவில் மேற்கு
கிளை இல 13

54. பொ. நடராசா
55. சு. இராசேந்திரம்
56. வே. விக்கினராசா
57. மு. சிவஞானசுந்தரம்
58. க. பாலசுப்பிரமணியம்
59. ஆ. ரங்கராஜன்

வண் வடமேற்கு கிளை இல. 14

60. க. தம்பிராசா
61. த. இரத்தினராசா

கொக்குவில் கிழக்கு
கிளை இல 16

62 இ இரத்தினகுமாரசிங்கம
63. சி. கந்தையா
64. ஐ சண்முக

கோண்டாவில் கிழக்கு
கிளை இல. 17

65. நா. ஜெயந்தநாதன்
66. செ, சபாரத்தினம்
67 பெ . சபாலிங்க
68. ஏ. பி. இராசையா
69. சோ சண்முகலிங்கம்

காளிகோவிலடி கிளை இல 18

70. அ. செல்லத்துரை
71 இ. வேலாயுதம்
72. மு. நாகலிங்கம்
73 நா நவரத்தினம
74 இ. கபிராசா
75 ச சிவனடியான்
76 ஆ ஜீவரத்தினம்
77. தவகுலநாதன்
78 க. வைத்திலிங்கம்

நாராயண கிளை இல. 9

79 நா கிருஷ்ணராசா
80 ப. துரைராசா

கோண்டாவில் வடமத்தி
கிளை இல. 20

81 மா உதயகுமாரன்
82. வ. சந்திரசேகரம்

---

"மூலதனம் ஆதாயத்தை எடுத்துச் செல்லும் நிலையில் இருந்து உழைக்கும் நிலைக்குத் தாழ்த்தியதின் மூலம் கூட்டுறவு இயக்கம் ஒரு சமுதாயப் புரட்சியை உருவாக்கிவிட்டது என்று கூறினல் மிகையாகாது"

பேராசிரியர் – ஜீத்

அன்பளிப்பு

திருமகள் அரிசி ஆலை

133, காங்கேசன்துறை வீதி,

யாழ்ப்பாணம்.

தொலைபேசி : 646

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*With best Compliments :*

DIAMON TEA
டயமன் தேயிலை

DIAMON INDUSTRIES & DISTRIBUTORS

3rd Lane, Power House Road,
Jaffna.

நல்லூர் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம் நடாத்தும்
கூட்டுறவு தின விழா சிறப்புற வாழ்த்தும்;

யாழ் நகரின் முன்னணி

0 புகைப்படப் பிடிப்பாளர்கள்

0 புளக் தயாரிப்பாளர்கள்

0 போட்டோ ஸ்ரற் பிரதி பண்ணுபவர்கள்

★ சித்திராலயா ★

18, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.

தொலைபேசி: 522

*With the Best Compliments of,*

PEC

**Promoters Engineering**
**Company Ltd.**
844, POINT PEDRO ROAD,
NALLUR,
JAFFNA.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

நல்லூர் பல நோக்குக் கூட்டுறவுச் சங்க கூட்டுறவாளர் தின விழா சிறப்புற வாழ்த்துகிறோம்.

# மல்ரி ஒயில் இன்டஸ்றீஸ் லிமிட்டெட்

காங்கேசன்துறை வீதி,
இணுவில்
தொலைபேசி: 339 (சுன்னாகம்)

கிளை:

மில்க்வைற்,
79, மெசன்சர் வீதி, கொழும்பு—12
Phone: 36063

நல்லூர் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம்,
கொண்டாடும் கூட்டுறவாளர் தின விழா
சிறப்புற எமது இதயபூர்வமான வாழ்த்துக்கள்

# அண்ணா
## இண்டஸ்ரியல்ஸ்

- அண்ணா பத்திகள்
- அண்ணா கோப்பி

அண்ணா இன்டஸ்ரியல்ஸ்
இணுவில்
போன்: 7412 யாழ்.

கிளைகள் :

இல 4 நவீன சந்தை யாழ்ப்பாணம் போன் 7413
இல 1, மத்திய சந்தை சுன்னாகம்
சிறிநடராசா பிறதர்ஸ், காங்கேசன்துறைவீதி, இணுவில்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்பளிப்பு

## ஏ. கே. தங்கராசா

*76, ஆஸ்பத்திரி வீதி,*

*யாழ்ப்பாணம்.*

தொலைபேசி: 7314

---

அன்பளிப்பு

## லீலா அரிசி ஆலை

மருதனைமடம்

## லீலா ஸ்ரோர்ஸ்

சுண்ணாகம்.

---

நல்லூர் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கவிழா சிறப்புற எமது வாழ்த்துக்கள்.

### கோல்டன் ஸ்தாபனத்தினர்

★ தரமான

★ சுவையான

★ தேனீர்பருக

# கோல்டன் தேயிலை

காங்கேசன்துறை வீதி,

கொக்குவில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நல்லூர் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம்
கூட்டுறவாளர் தினவிழா சிறப்புற

வாழ்த்துகிறோம்

# எஸ். வி. முருகேசு

ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.

தொலைபேசி : 564

இம் மலர் நல்லூர் ப. நோ. கூ. சங்கத்தினரால் யாழ்ப்பாணம் கூட்டுறவு அச்சகத்தில் அச்சிட்டு, வெளியிடப்பட்டது. 645-80

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org